

காலஞ்சென்ற திவான்பஹதூர் S. RM. M. CT. பெத்தாச்சி செட்டியார்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

## இருபத்திரண்டாந்தொகுதி.

ருதிரோற்காரி—ரக்தாக்ஷி.

## Vol. XXII.

**1923-1924.**

பத்திராதிபர்:—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

# செந்தமிழ்

## இருபத்திரண்டாந் தொகுதியின்

### உள்ளுறை.

---


| விஷயம். | எழுதியவர். | பக்கம் |
|---|---|---|
| அறியவேண்டிய சில பழங் கதைகள்:— | ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர். | கசஎ |
| அனுதாபக்குறிப்பு:— | பத்திராதிபர். | உ0க |
| ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக் குறிப்பு:— | | ஙகச |
| ஆசிரியர் நல்லந்துவனார் காலம்:— | ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர். | ங0க, ஙருங, ஙஅகூ. |
| இந்துதேச சரித்ர காலக் குறிப்புகள்:— | ,, ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B.A., B.L., | அ0 |
| இரங்கற்பாக்கள்:— | ,, சு. நல்லசிவன்பிள்ளை. | உ0உ |
| ,, | ,, திருஞானசம்பந்தக்கவிராயர். | உ0ச |
| ,, | கரந்தைத்தமிழ்ச்சங்கத்தார். | உ0எ |
| இராமகுடநாடு :— | ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர். | சூக |
| இளங்கீரந்தையார் :— | | குங அ |
| இளங்கீரனார் :— | | சஉஅ |
| இளங்கீரன்:— | | கசஅ |
| ஐக்கியசங்கங்களின் மர்மங்கள்:— | ஸ்ரீமத். சுப்பிரமணிய சாஸ்திரி. | களசு |
| ஐக்கியசங்கமுறை:— | | க0எ |
| ஓர் ஐயுறவு:— | ஸ்ரீமத். கே. ஜி. சேஷையர். | ருஉ |

| | | |
|---|---|---|
| கம்பராமாயண இன்கவித்திரட்டு:— | ஸ்ரீமத். வெ.ப. சுப்பிரமணியமுதலியார் | ௨௫, ௯௫, ௧௩௯, ௨௪௯, ௩௪௯, ௩௬௯, ௪௨௯, ௪௫௯. |
| கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றும் ஆண்டுவிழா நிகழ்ச்சி முதலியன:— | | ௪௪௨ |
| கீழ்த்திசைத் தொன்னிலையாராய்ச்சிக் கழகத்தின் அகில இந்தியக்கூட்டவிளம்பரம்:— | | ௩௧௭, ௩௧௮. |
| கௌடில்யரது அர்த்த சாஸ்திரம்:— | ஸ்ரீமத். G. ஹரிஹரசாஸ்திரி. | ௨௩௮ |
| சரமகவி:— | | ௩௬௮ |
| சிலப்பதிகாரவாராய்ச்சி:— | ஸ்ரீமத். திரு. நா. அப்பனையங்கார். | ௧௭ |
| செய்யுட்பொருத்தவிலக்கணம்:— | ,, ந. பத்மாசனி அம்மாள். | ௧௪௯, ௨௪௬, ௪௫௪. |
| தமிழரும் ஆந்திரரும்:— | ,, மு. இராகவையங்கார் | ௨௬௫ |
| தமிழ்ப்பரீக்ஷை விளம்பரம்:— | | ௨௩௦ |
| தமிழ்வளர்ச்சி:— | ஸ்ரீமத். கே. ஜி. சேஷையர். | ௪௧ |
| தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:— | | ௩௧௩. |
| தாய்மொழியை வளர்த்தல்:— | ஸ்ரீமத். ஊ. சா. வேங்கடராமையர். | ௧௫௫ |
| திருமங்கையாழ்வாரும் தந்திதுர்க்கனும்:— | ,, மு. இராகவையங்கார். | ௧ |
| பலகவித்திரட்டு:— | ,, சே.ரா. சுப்பிரமணியக்கவிராயர். | ௫௩ |
| பாடாந்தரமும் பொருள் கோடலும்:— | ,, சி. கணேசையர் | ௨௩௩ |
| பிழையுந் திருத்தமும்:— | ,, ஸத்தியவாகீசுவரையர். | ௧௫௨ |
| புத்தக மதிப்புரை:— | | ௮௫, ௧௭௬, ௨௫௫. |
| புரூரவசரிதை:— | உதவிப்பத்திராதிபர். | ௧௭௩, ௩௮௫, ௪௨௩, ௪௯௦. |
| பூஞ்சோலைகாவலன்:— | ஸ்ரீமத். பிரபோதசைதந்யர். | ௬௯ |
| பெருங்கதை:— | பத்திராதிபர். | ௧௫௩ |

| | | |
|---|---|---|
| போலியெழுத்து:— | ஸ்ரீமத். சி. கணேசையர். | ௮௯ |
| மணிமேகலை:— | ,, இ. மு. சுப்பிரமணியபிள்ளை. | ௩௩ |
| மணிமேகலையுஞ் சிலப்பதிகாரமும்:— | ,, K.S. நவநீதகிருஷ்ணபாரதி | ௧௮௫, ௨௨௫, ௨௫௭. |
| மதங்க சூளாமணி:— | ,, சுவாமி விபுலாநந்தர். | ௩௨௧, ௩௬௧, ௪௦௧, ௪௬௭. |
| மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 22, 23-ம் வருடக் கொண்டாட்ட நிகழ்ச்சிவிவரம்:— | | ௨௯௪ |
| ஷை கொண்டாட்டத்து அக்கிராசனர் பிரசங்கம்:— | | ௪௪௯ |
| மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 22, 23-ம் வருஷோத்ஸவ மங்கள வாழ்த்து:— | ஸ்ரீமத். சு. நல்லசிவன்பிள்ளை. | ௩௪௫ |
| | ,, வே. முத்துஸாமி ஐயர், M.A., L.T. | ௩௪௭. |
| | ,, எஸ். ஐ. இராமநாதசாஸ்திரி. | ௩௪௮ |
| மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவுகணக்குகள்:— | (பகுதி ௨, ௩, ௪, ௫, ௬, ௭.) | |
| மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத்தீர்மானங்கள்:— | | ௭௮, ௨௨௩ |
| மதுரைத்தமிழ்ச்சங்க மஹாஸபைத்தீர்மானங்கள்:— | | ௩௧௯ |
| மதுரை-ராமநாதபுரம் ஜில்லா ஐக்கியசங்கத்தின் 6-வது மஹாஸபையின் அக்கிராசனர் பிரசங்கம்:— | | ௧௦௩ |
| மஹாலக்ஷ்மி ஸ்தோத்திரம்:— | ஸ்ரீமத். சுவாமி விபுலாநந்தர். | ௨௪௧ |
| மேற்றிசைச்செல்வம்:— | ,, பிரபோதசைதந்யர். | ௧௨௧ |
| வசிட்டரும் வள்ளுவரும் கூறிய அரசியல்:— | ,, சி. கணேசையர். | ௧௩௧ |
| விஞ்ஞானதீபம்:— | ,, சுவாமி விபுலானந்தர் | ௨௦௯ |


---

## இத்தொகுதியில் வெளிவந்த நூல்.


பெருந்தொகை :— ஸ்ரீமத் மு. இராகவையங்கார்.
௧, ௩, ௪, ௬, ௭, ௯, ௧௦, ௧௧ பகுதிகள்.


---

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி உஉ.] ருதிரோத்காரிஸு கார்த்திகைமீ [பகுதி க.

Vol. XXII. November-December-1923. No. 1.

ஸ்ரீ:

## திருமங்கையாழ்வாரும் தந்திதுர்க்கனும்.

பங்களூரிற் பிரசுரமாகும் "மிதிக்-ஸொஸைட்டி" பத்திரிகை (The Quarterly Journal of Mythic Society) யில், திருமங்கையாழ்வார் காலவிஷயமாகத் திருவனந்தபுரம் ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஸ்ரீ K. G. சேஷ ஐயர் அவர்களும், Dr. ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்களும் எழுதிய விவாதவுரைகளை சமீபத்திற் படித்தவனானேன். இற்றைக்குப் பத்தொன்பது வருஷங்கட்கு முன் அவ்வாழ்வார் காலத்தைப்பற்றி முதன்முதல் நான் 'செந்தமிழ்'ப்பத்திரிகையில் எழுதியபோது, அவ் அபிப்பிராயங்கள் டாக்டர் ஐயங்கார் அவர்களால் முழுதும் ஆதரிக்கப்பட்ட விஷயம் பலரும் அறிந்தவை. அப்போது எழுதப்பட்ட காரணங்கள் பொருந்தாதவையென்று ஸ்ரீமாந். சேஷ ஐயரவர்கள் கருதி, டாக்டர் ஐயங்கார் அவர்கள் எழுதிய சமாதானங்களையும் பலமாக ஆக்ஷேபித்து ஷை பத்திரிகையில் எழுதியுள்ளார்கள். அவர்கள் ஆக்ஷேபங்களைப் பரிசீலனைசெய்து விடையளிக்க வேண்டியகடமை இவ்விவாதத்துக்கு மூலகாரணமான எனக்கும் உண்டாதலால், அறிஞர் என் கருத்துக்களையும் அறிந்துகொள்ள விரும்பி இஃது எழுதலாயினேன்.

திருமங்கைமன்னன், அட்டபுயகரப்பதிகத்து இறுதியிற்பாடிய—

"மன்னவன் தொண்டையர்கோன் வணங்குநீள் முடிமாலை வயிரமேகன்
தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி"

என்ற தொடர்க்கு—தொண்டையர்கோனால் வணங்கப்படும் வயிரமேகனுடைய வலிபுகழ் சூழ்ந்த கச்சி என்பது, நான் அன்வயித்துக் கொண்ட பொருள்—என்பதும், இப்பொருள் சாலன ஆதரவு பெறுவதென்பதும் தெரிந்தவை. இங்ஙனம் ஒருதொடராகக்கொண்டு, தொண்டையர்கோனையும் வயிரமேகனையும் இருவராகப் பொருள் கூறுதல் பொருந்தாதென்பதே, ஐயரவர்கள் ஆக்ஷேபங்களுள் தலைமையாயுள்ளது. அவர்கள் கருத்தின்படி ஒருவனைப்பற்றியதாகப் பொருள்கொள்ளும்போது, 'தொண்டையர்கோனை வயிரமேகன் வணங்கும் மாலை; (அவன்) வலிபுகழ்கள் சூழ்ந்த கச்சியட்டபுயகரத்தாதியை' என்று இருதொடராக்கி,—வயிரமேகன் என்பதைத் தொண்டையர்கோனுடன் கொண்டு கூட்டியும், 'அவன்' என ஒருசொல் வலிபுகழ்கட்குமுன் வருவித்தும் பொருள்கொள்ளவேண்டும்.

ஐயரவர்களது கருத்துப்படி, 'நீண்முடிமாலை' என்ற தொடரை வயிரமேகனுக்கு விசேடணமாக்காமல், 'தொண்டையர்கோன் வணங்கும் நீண்முடி (த்திரு) மாலை' எனத் தனித்தொடராகப் பிரித்துப் பொருளுரைக்குமிடத்து, அப்பிரிப்பு, தொண்டையர்கோனும் வயிரமேகனும் இருவேறானவர் என்று பொருள்படுதற்குப் பெரிதும் அனுகூலமாகுமளவு, ஒருவர் என்று கொள்வதற்கு ஆகாது. "ஆசிரியன் பேரூர் கிழான் செயிற்றியன் வந்தான்" என்று, ஆசிரியன்முதலிய பெயர்களை ஒருவினைகொண்டு முடித்தால், அவை யாவும் ஒருவனையே குறிக்கும் என்றும், அப்பெயர்களையே ஆசிரியன்வந்தான், பேரூர்கிழான்வந்தான் எனத் தனித்தனி அவ்வினையையேகொண்டு முடித்தால் பலரென்றே காட்டுமென்றும் இலக்கணநூல்கள் விதிக்கின்றன. (தொல். சொல். கிளவி. 42). ஒருவினை கொண்டு முடியும் பெயரடுக்குகளுடன் அவ்வினையையே தனித்தனிகூட்டுமிடத்துப் பொருள்வேறுபாடு உண்டாகுமாயின், 'ஆசிரியன் வந்தான், பேரூர் கிழான் சென்றான்' என வேறுபட்ட வினைகளைத் தனித்தனிகொண்டுமுடியும்பெயர்கள் வேறுவேறானவை என்றே காட்டத் தடையுண்டோ? ஒருவினைகொண்டு முடியும் பெயர்களைப்பற்றிக் கூறிய விதி, அதுபோன்று வரும் வாக்கியக்கூறுகளிடத்தும் ஒத்துச்செல்லக் கூடியதேயாதலின், 'தொண்டையர்கோன் வணங்கும்; வயிரமேகன் ..........வலிபுகழ்சூழ்ந்த'— என்றதொடர்களும் இருவரைக்குறிப்பதென்பதற்கே பெரிதும் அனுகூலமாதல் காணலாம்,

திருமங்கைமன்னன்வாக்கை நோக்குவோரெவர்க்கும், அஃது, ஆற்றொழுக்காகப் பொருளைக் கொண்டுசெல்லும் போக்குவாய்ந்ததென்பது எளிதிற் புலப்படத் தடையில்லை. கொண்டுகூட்டு முதலிய பொருள்கோண்முறையால் நலிந்து பொருள்காணவேண்டுவது, அவர் பாசுரங்கட்கு ஆவசியகமன்று. அம்முறையே மேற்குறித்த தொடர்க்கு நான் கூறிய பொருள், சரித்திரப்பொருத்தம் பெறுவதுமட்டுமன்றி, ஆற்றொழுக்காக நேரே செல்வதையும் நன்கறியலாம். பூர்வாசாரியரான ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை, ஐயரவர்கள் கருத்துக்கேற்ப வியாக்யானஞ் செய்திருப்பது உண்மையே. அவ்வாறு, அப்பெரியார் எழுதநேர்ந்ததற்குத் தக்ககாரணம் உண்டு. தொண்டைமான்சக்கரவர்த்தி என்ற அரசனொருவன் ராஜர்ஷியாகவும் பரமபாகவதனாகவும் மிகப்பழங்காலத்தில் விளங்கினவன் என்றும், அவன்பொருட்டுத் திருமால் பல அநுக்ரகங்களைப் புரிந்தருளினர் என்றும் புராணப்பிரசித்தமான கதைகள் வழங்குகின்றன.* மேற்குறித்த "மன்னன் தொண்டையர்கோன்" என்ற தொடரினும்,

"துளங்கு நீண்முடி யரசர்தங் குரிசில் தொண்டை மன்னவன்"

"தென்னன் தொண்டையர்கோன் செய்தநன் மயிலைத் திருவல்லிக்கேணி"

என்ற தொடர்களினும், ஆழ்வாராற் குறிக்கப்பட்டவன் அத்தொண்டைமான்சக்கரவர்த்தியே என்பதும், அவன் பல்லவர்க்குமுன் தொண்டைநாடாண்ட அரசருள் ஒருவனென்பதுமே அவ்வியாக்யாதாவின் கருத்து. இத்தொண்டைமானுக்கும் பல்லவர்க்கும் சம்பந்தமுண்டென்று இக்காலத்தார் செய்யுஞ் சரித்திரவூகப்படி கருதி அவர் எழுதினவரல்லர். அடுத்த பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்தின் அவதாரிகையிலும், பல்லவ

*இச்சக்கரவர்த்திக்குத் திருவேங்கடமுடையான் ஓர் ஆபத்துசமயத்தில் தம் சங்க சக்கரங்களை அளித்தருள, அவற்றைக்கொண்டு அவ்வரசன் பகைவேந்தரை வென்றான் என்றும், அதுமுதல் திருவேங்கடமுடையானுக்கு அவ்வாயுதங்கள் இல்லாமற்போக, ஸ்ரீ இராமாநுஜர்காலத்தே, அவை அப்பெருமான் கரங்களிற் சாத்தப்பட்டன என்றும் சரித்திரமுள்ளன. "முனித்தொண்டைமான்கையிற் சங்காழி நல்கியென் மூரற்செவ்வாய்க், கனித்தொண்டை மான்கையிற் சங்காழி கோடல் கருமமன்றே" என்றார் திவ்வியகவி-ஐயங்காரும். இதுபோலும் புராணசரித்திரங்கள் இன்னும் பல.

ரின் வேறுபட்டவன் இத் தொண்டைமான்சக்கரவர்த்தி என்றே அவர் கருதியெழுதுதலுங் காணலாம்.* ஆகவே, பல்லவர்க்கு வயிரமேகன் என்ற பெயர்வழக்குண்டென்று அவ்வியாக்யாதா குறிப்பிடுவதாக ஐயரவர்கள் நெடுக எழுதிச்செல்வதற்கு ஆதாரமேயில்லை. இக்காலத்துப் போலச் சரித்திரச் செய்திகள் தெரியவருதற்கு வேண்டிய சாதனங்கள் இல்லாமையால், கர்ணபரம்பரையிற் பிரசித்தனாக அறியப்பட்ட தொண்டைமான்சக்கரவர்த்தியையே திருமங்கைமன்னன் நெடுகக் கூறினவராகக்கொண்டு அவனுக்கேற்பப் பூர்வீகர் பொருளை இணக்கி எழுதநேர்ந்தது சிறிதும் வியப்பன்று. அவ்வழியைப் பின்பற்றிச் செல்வதுதான், இக்காலத்துச் சரித்திரவாராய்ச்சிசெய்வார்க்கும் உரியது என்பது முடிபாயின், நான் எழுதிய பொருள் கொள்ளத்தகாததாகலாம். அங்ஙனம் சரித்திரவறிஞர் கருதக்கூடும் என்று நான் நம்பவில்லை.

இனி, பெரியவாச்சான்பிள்ளைவியாக்யானத்துள்—"ராஜா-தொண்டைமான்சக்கரவர்த்தி; ....வயிரமேகன் என்று அவற்கு (க்குடி)ப் பெயர்" என்ற வாக்யங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் (குடிப்)பெயர் என்பதிலுள்ள 'குடி' என்பது பிற்காலத்தாரால் இடையிற் சேர்க்கப்பட்ட சொல்; இவ்விஷயம் ஷை வாக்யத்தை விளக்கும் பழைய அரும்பதவுரையுள் 'அவற்குப்பெயர்—சக்கரவர்த்திக்குப்பெயர்' என்று குடியை விலக்கிப் பொருளெழுதியிருப்பதாலும், 'குண்டலிதாகூஷரம் க்வாசித்கம்; அரும்பதத்துக்குப் பாடமில்லை' எனப் பதிப்பாளர்காட்டிய கீழ்க்குறிப்பாலும் விசதமாகும்.† ஆகவே, வயிரமேகன் என்பது பல்லவர் குடிப்

*"மன்னவன் தொண்டையர்கோன் வணங்கு நீண்முடிமாலை" என்று, தொண்டைமான்சக்கரவர்த்தி திருவட்டபுயகாத்திலே அநுகூலித்தபடியை அநுசந்தித்தார்; அந்தப்ரஸங்கத்தாலே பல்லவன் என்பானொருத்தன் பரமேச்வரவிண்ணகரத்திலே அதிமாத்ரமான ஆநுகூல்யங்களை...பண்ணினனாயிற்று; அத்தாலே அவன்படிகளெல்லாம் தமக்கினிதாயிருக்கையாலே, அவற்றை அநுபவித்துப் பேசுகிறார்" எனக் காண்க.

†"அவன் பக்ஷாபிமானியாய் வணங்கியபின்பாயிற்று ஈசுவரன் முடிநாற்றரித்ததும்...முன்பெல்லாம் ஈராசுபட்டிறே போந்தது" எனவரும் பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானபங்தி, பல்லவமல்லனது சரித்திரங்குறிப்பதாகச் சிலர் மனோபாவம் பண்ணி எழுதியது, அவ்வியாக்யாதாவின் கருத்தன்றென்பதை ஆராய்ந்து தெளிக.

பெயராகப் பெரியவாச்சான்பிள்ளை எழுதிவிட்டார் என்று ஒருதலையாகத் துணிவதற்கில்லையென்பதும் அறியத்தக்கது. இவற்றால் பல்லவருடன் தொண்டைமானையாவது வயிரமேகனையாவது தொடர்புபடுத்துவதற்கு ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளையை ஆதாரமாகக்கொள்வது சிறிதும் இயையாமை கண்டுகொள்க.

இனி, 'வயிரமேகன் பல்லவனால் வணங்கப்பட்டவன்' என்று திருமங்கைமன்னன் பாடினவராயின், தாம் பலபடியாகச் சிறப்பித்துப் போந்த பல்லவனை இழித்துக்கூறியதாகு மாதலால், அவ்வாறு ஒருகாலும் அவர் பாடியிரார்—என்று ஐயரவர்கள் கருதுகிறார்கள். அட்டபுயகரத்தைத் திருமங்கையார் பாடநேர்ந்தபோது—பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்தைப்போல-பல்லவனைச் சிறப்பிக்கச் சங்கற்பித்துக்கொண்டு பாடினவரல்லர். அவ்வட்டபுயகரம் கச்சிப்பேரூரைச் சார்ந்தது என்பதைக் குறிக்கவந்தவர், அப்போதிருந்த கச்சியினிலைமை ஒன்றையும் "வயிரமேகன் தன்வலிதன்புகழ் சூழ்ந்தகச்சி' என்று பதிகமுடிவில் வெளியிட்டருளினர். திருத்தேவனார்தொகைத்திருமாலைப் பாடநேர்ந்தபோது, இவ்வாழ்வாரே—

"மாவருந்திண் படைமன்னை வென்றிகொள்வார் மன்னுநாங்கைத்
தேவருஞ்சென் றிறைஞ்சுபொழிற் றிருத்தேவ னார்தொகையே".
(பெ. தி. 4 4. 2.)

என்று தாம் பாடப்புக்க தலத்துக்கன்றி, அத்தலத்தைத் தன்னுட்கொண்ட திருநாங்கூர்க்கு, தாம் நேரிற்கண்ட * வீரச்செயலொன்றை விசேடணமாக்கிக் கூறியதும், ஈண்டு ஒப்பிட்டறியத்தக்கது. பழைய அடியாரெல்லாம் ஒவ்வொருகாலத்து ஒவ்வொரு சந்தர்ப்பத்தில், தலயாத்திரைசெய்து பதிகங்கள் பாடிவந்தவரென்பதும், அவ்வப்போது கண்ட விசேடச்செய்திகளும் அவர்கள் வாக்கில் தன்னடைவே அமைவதுண்டென்பதும் நாம் நன்கறிந்தவை. அம்முறைபே, கச்சிப்பதி சென்று அட்டபுயகரத்தப் பெருமானைப் பாடநேர்ந்தபோது 'மருவலர்

---

*இவ்வீரர் பாண்டியனையும் வடவேந்தரையும் வெற்றிகொண்டவர் என்பது—"ஒண்டிறற் றென்னனோட வடவரசோட்டங் கண்ட—திண்டிறலாளர் நாங்கூர்" (பெ. தி. 4, 5, 6) என்று பாடுதலால் விளங்குகின்றது.

தம் முடல்துணிய வாள்வீசும்' பாகாலராகிய தம்மையும் வியப்புறச் செய்த வீரச்செய்தியொன்று நிகழ்ந்ததைக் கச்சிக்கு விசேடணமாக்கி அவர் கூறினர் எனின், அது கவியின் இயற்கைச்சிறப்பைக் காட்டுமே யன்றிப் பிறிது குறிக்குமோ? தம்காலத்தே பெருவேந்தனும் வீரனுமி ருந்தபல்லவனையும் வெற்றிகொண்ட அரசனொருவனது அரியபெரிய செயலை வீரசிகாமணியாகிய ஆழ்வார் நேரில் அறிந்திருந்தும், அதனை மறைத்துச் செல்வதற்கு, வீரத்தால் அப்பல்லவனுக்கு ஆழ்வார் பட்டிருந்த கடமையென்னோ? வென்ற வேந்தன் எத்தகையவனாயினும், வீரத்தால் அவனடைந்த புகழை, சூரரும் பண்டிதருமாயுள்ள இவ்வாழ்வார் புகழாமல் வேறு யார் புகழ்தற்கு உரியவர்? திருநறையூர்த் திருமாலைவழிபட்டுத் திருப்பணிசெய்த செங்கணானைப் பரமபாகவதனாகப் புகழ்ந்துவருந் திருமங்கைமன்னன், அவன் சிவபிரானுக்கு 70-மாடக்கோயில் கட்டிப் பெருமைபெற்றதை—

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற்
கெழின்மாட மெழுபதுசெய் துலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே"

என்று சிறப்பித்துப்போந்தனர். இங்ஙனஞ் சிறப்பித்தது, திருமாலடியவனாக அவ்வரசனைப் பெரிதும் புகழ்ந்துவருஞ் சந்தர்ப்பத்துக்குப் பொருந்தாததுபோற் றோன்றினும்*, அவன் நிகழ்த்திய பெருஞ்செயலொன்றை மறையாது எடுத்துக்கூறுவதில் அவ்வாழ்வார்க்குள்ள விருப்பமிகுதியை இவ்வடிகள் குறிப்பிடுவனவன்றோ? பல்லவமல்லனது வீரச்சிறப்பையும் திருமாலடிமைத்திறத்தையும் ஆழ்வார் புகழநேர்ந்த காலமும் சந்தர்ப்பமும் முற்றும் வேறாகவேண்டுமென்பதும், இரட்டவரசனான வயிரமேகனை அவர் தற்செயலாய்ப் புகழநேர்ந்தது, அவனது வீரம்பற்றியன்றி அடிமைத்திறம்பற்றியன்றென்பதும் நன்றாக அறிந்துகொள்ளத்தக்கன.

---

* இங்ஙனஞ் சிறப்பித்துப்போந்ததற்கு, ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை, வேறு கருத்து நயம்பெறக்கூறியருளுவர்.

இனி, பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்திற் குறிக்கப்பட்ட பல்லவன் ஒருவனன்றிப் பலராகவேண்டுமென்றும், ஒருவனையே பற்றியதாயினும் அப்பல்லவனும் வயிரமேகனும் திருமங்கைமன்னன் காலத்தவர் என்று கருத இடமில்லையென்றும் ஐயரவர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள். அவர்கள் கருத்துப்படி பலராயின், அப்பதிகத்திற் 'பல்லவர் பணிந்த' என்று ஓரிடத்தேனும் பன்மையால் ஆழ்வார் குறித்திருப்பாரென்பது திண்ணம். பாடல்தோறுமேயன்றி இறுதிச்சாற்றுக்கவியினும், 'பல்லவர்கோன்பணிந்த' என்று ஒருமையாற்கூறி அவர் முடித்திருப்பதே அப்பதிகத்துக்கண்ட செயல்கள் ஒருவனைப்பற்றியதென்பதற்குத் தக்க சான்றாம். ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளையும் "பல்லவன் என்பான் ஒருத்தன்" செயல்களைக் கூறுவதாகவேகருதி யெழுதியிருத்தலுங் காணலாம். ஆகவே, திருநறையூர்ப்பதிகத்தில் சோழன்செங்கணானொருவனைப் பாடியவாறுபோலவே, இப்பதிகமும் பாடப்பெற்றதென்று கருதுதலே நேரானதென்க.

இனிப் 'பல்லவமல்லன் ஆழ்வார் சமகாலத்தவன் ஆகான்' என்பதற்கு ஐயரவர்கள் முக்கியமாகக்கொண்ட காரணங்கள் மூன்று:—

(1) உதயேந்திர சாஸனத்துக்கண்ட போர்த்தலைவன் வேறு; ஆழ்வார்கூறும் போர்த்தலைவன் வேறு.

(2) ஷை சாஸனத்துக்கண்ட போர்க்களங்களுடன் ஆழ்வார் கூறும் போர்க்களங்கள் ஒற்றுமைபெறவில்லை.

(3) பண்டு, பண்டொருகால், முனநாள், அன்று என்று ஆழ்வார் சொற்பிரயோகித்துப் பாடுவதால், அவராற்குறிக்கப்பட்ட பல்லவன் அவர்தலைமுறைக்கு முற்பட்டவனேயாவன்—என்பன.

I. உதயேந்திரசாஸனத்துக்கண்ட போர்கள், உதயசந்திரன் என்பான் நேரில்நடத்தியன என்று அச்சாஸனங் கூறுவது உண்மையே. அத்தலைவனே, பல்லவமல்லனுடைய சேனாபதி என்பதும், தன் பொருட்டன்றித் தன்னரசன்பொருட்டே ஷை போர்களை நடத்தியவன் என்பதும் தெரிந்தவைகளாம். ஆயின், அச்சேனாபதியடைந்த வெற்றிப்புகழெல்லாம் அவனரசனாகிய பல்லவனுக்கன்றி வேறியார்க்கு

உரியதாகும்? அரசர் நேரிருந்து நடத்தினும் நடத்தாதுபோயினும், போர்த்தலைவரடைந்த செயல்களை அரசருடையனவாகக் கூறுவது உலக வழக்கும் நூல்வழக்குமன்றோ? 'வாதாபித் தொன்னகரந் துகளாக்கி' வந்து அரசனைப் பணிந்து நின்ற சிறுத்தொண்டர் வெற்றியைப்* பல்லவனுக்கும், கருணாகரத்தொண்டைமான் அடைந்த† கலிங்கவெற்றியைச் சோழனுக்கும் உரியவாக்கி உலகம் வழங்குதலை யார்தாம் அறியார்! பல்லவமல்லன், தன் போர்த்தலைவன் நடத்திய போர்முகங்களொன்றையேனும் எட்டிப்பாராதவன் என்று ஒருதலையாகச் சொல்வதற்கும் இடமில்லை.

II. ஷ சாஸனங்கூறும் மண்ணைக்குடி நெல்வேலி காளிதூர்க்கம் என்ற போர்க்களங்கள், பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்திலும் வருதல்கொண்டு, அவ்விரண்டிடத்துங் கூறப்பட்ட செயல்கள் பல்லவமல்லன் சம்பந்தமானவையே என்று கருதினேன். சாஸனத்துக்கண்ட மண்ணைக்குடி நெல்வேலி என்ற இரண்டு பாசுறைகளும், ஆழ்வார்வாக்கில், மண்ணை நெல்மெலி என்று காணப்படுகின்றமையால் அவ்விரண்டும் வேறுபட்டவை என்று ஐயரவர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள். வெண்ணெய்நல்லூரை வெண்ணை என்பதுபோல, மண்ணைக்குடியை மண்ணை என்று வழங்குவது நூல்வழக்கென்பது பலரும் அறிவர். அரிசைக்குடி, கருந்தட்டான்குடி என்பவற்றை, அரியை கரந்தை என்று இக்காலத்தார்கூடத் திரித்து வழங்குதலைக் காணலாம். மண்ணை யென்பது ஐயரவர்கள் கருத்துப்படி யாறன்றிப் படைவீடாகவே உரைகாரர் கருதுதலும் நோக்குக. இனி, நெல்மலி, நெல்மெலி, நெல்வெலி, நெல்வேலி என்ற பெயருள்ள ஊர்கள் தமிழ்நாட்டில் மிகப்பலவாக உள்ளன; மேற்காட்டிய உருவங்கள் சிலவிடங்களில் வேறுபாடின்றியும் மக்களால் வழங்கப்படுவதைக் காணலாம். ஆயின், வடமொழியில் அமைந்த ஷ சாஸனத்தில் ஒருவகையாகவும், ஆழ்வாரால் வேறொருவகையாகவும்—ஒரூரே இருவேறுபட வழங்கப்பட்டிருத்தலுங் கூடியதேயன்றோ? மேலும், உதயேந்திரசாஸனமாக இப்போது காணப்படுவது மூலப்பிரதியைப் பார்த்துப் பிற்காலத்து எழுதப்பட்ட பிரதியே என்பதும் அதன்

---

*பெரியபுராணத்திற் பல்லவசேனாபதியாகிய சிறுத்தொண்டர்வெற்றியாகவே கூறப்படுதல் காண்க. †கலிங்கத்துப்பரணி—11, 130.

உள்ளீடான விஷயங்களைப்பற்றி ஐயப்பாடுகள் உண்டென்பதும் சரித்திரவறிஞர்தெரிந்தவை. அதனால், அதனிற்கண்ட எழுத்துவேறுபாடுகளைக் கொண்டு ஒருதலை துணிவது அவ்வளவு பொருத்தமுடையதுமன்று.

ஷை சாஸனத்துக்கண்ட நெல்வேலிப்போர் சபரர் (வேடர்) தலைவனாகிய உதயணனுடனும், ஆழ்வார்கூறும் நெல்மெலிப்போர் சேரனுடனும் நடந்தனவாகக் காணப்படுதலால், அவ்விரண்டனையும் ஒன்றாகக் கொள்வது பொருந்தாது என்பது ஐயரவர்கள் கருத்து.

"விடைத்திறல் வில்லவ னெல்மெலியில் வெருவச் செருவேல் வலங்கைப்பிடித்த படைத்திறற் பல்லவர்கோன்"

என்பது ஆழ்வார் அருளிச்செய்த தொடர். வில்லவன் என்பது, வில்லாளனான வீரனையும், வில்லைக்கொடியாகவுடைய சேரனையும், வில்லால் ஆறலைத்தும் விலங்குகளைக் கொன்றும் வாழும் வேடனையும்* குறிக்கும் ஆற்றலுடையதாம். ஈண்டுச் சாஸனத்துடன் இணங்க நோக்குமிடத்து, 'வேடர்தலைவன்' என்று பொருள் கொள்ளுதல் பெரிதும் பொருந்துவதன்றோ? "பல்லவன் வில்லவ னென்றுலகிற் பலராய்ப் பலவேந்தர் வணங்குகழற்—பல்லவன் மல்லையர் கோன்" எனச் சேரவரசன் பல்லவனை முற்பட வணங்கிவிட்டசெய்தியை ஆழ்வார் முதற்பாசுரத்தே கூறிவிட்டனராதலால், எட்டாம்பாட்டிற் கண்ட 'விடைத்திறல் வில்லவன்' என்பவன், பாண்டியன்போல, பல்லவனுக்கு அடங்காதெதிர்த்த வேறொரு தலைவனாதல் வேண்டும் என்று கருதுவதே பெரிதும் ஏற்புடையதென்க.

இனி, 'பகவதியாற் காக்கப்படுங் காளிதுர்க்கத்தை யழித்துப் பாண்டியசேனையை மண்ணைக்குடியில் தோற்கச் செய்தவன் எவனோ' என்ற வாக்கியம், உதயசந்திரனது கடைசிச்செயலாக ஷை சாஸனத்துள் வருகின்றது. இதற்குமுன் னமைந்த வாக்கியங்களின்கதியை உற்றுநோக்குவோர்க்கு இத்தொடரிற் கண்ட இருசெயல்களும், இவனை உதயசந்திரன் தாக்கியவகைகளே என்பது விளங்கத் தடையில்லை. 'காளிதுர்க்கத்தையழித்து' என்பது வேறொருவனைத்தாக்கிய செயலா

* வடமொழியிலும் 'ஹில்ல' என்பது வேடர்க்கு வழங்கும்பெயர்.

யின் 'அத்துர்க்கம் யாது?' என்று எழக்கூடிய கேள்விக்கு விடையில்லையாம். ஆகவே, பின்வருந்தொடர்கொண்டு, அது பாண்டியனுடையதென்று எளிதிற் றெரிந்துகொள்ளலாம். பாண்டியனுக்கு எழுபேராண்கள் இருந்தன என்று புறநானூறு (33) கூறுவதால் அவற்றுள் இக்காளிதுர்க்கமும் ஒன்றாதல்வேண்டும். இவ்வரணைப் பல்லவசேனாபதி அழித்துவிட்டு மண்ணைக்குடியில் திரண்டெதிர்த்த பாண்டிய சேனையை உதயசந்திரன் முறியடித்தான் என்பதே சாஸனப்பொருளாதல் காணலாம்.

இங்ஙனம் பலமான துர்க்கமொன்றைப் பற்றியிருந்த பாண்டியன்மேற் பல்லவன் படையெடுத்த செய்தியையே—"தேம்பொழிற் *குன்றெயிற்றென்னவனைத் திசைப்பச் செருமேல் வியந்தன்று சென்ற....பல்லவர்கோன்" என்று திருமங்கைமன்னனுங் குறிப்பிட்டனராதல்வேண்டும், என்று நான் கருதியது தவறான ஊகமாகுமோ? சாஸனத்துக்குப் பொருந்தஅமைந்த இப்பொருளை நான் இழுத்துக்கொண்டதாகக் கருதியதே வியப்பாகும்.

இனி, மண்ணைக்குடி, நிம்பவனம், சூதவனம், சங்கரக்கிராமம் என்ற போர்க்களங்களை உதயேந்திரசாஸனங் கூறியதாயினும், இன்னாருடன் அவ்விடங்களிற் போர்நடந்தன என்பதை அது குறிக்கவில்லை. ஆயினும் இவ்வூர்களைப்பற்றிய ஆராய்ச்சியால், பாண்டிநாட்டின் எல்லைப்புறத்தில் அப்போர்கள் நிகழ்ந்திருக்கவேண்டும் என்று தோற்றுகின்றன. மண்ணைக்குடி என்பது, இப்போது தஞ்சாவூர் ஜில்லா அறந்தாங்கித் தாலூகாவைச் சார்ந்துள்ள மண்ணகுடி என்ற கிராமமாகும். சூதவனம், நிம்பவனம், சங்கரக்கிராமம் என்பவை, ஷெ ஜில்லா பட்டுக்கோட்டைத் தாலூகாவைச் சேர்ந்தவை. இவற்றுள், சூதவனம் என்பது திருவுசாத்தானம் எனத் தேவாரத்தும் கோவிலூர் என வழக்கிலும் உள்ள தலமாகும். †நிம்பவனம் என்பது வேப்பங்காடு என்ற ஊராம். ‡சங்கரக்

*குன்றெயில்—(வியாக்யானத்தின்படி) குன்றுபோலும் எயில் என்றேனும், குன்றின்மேலுள்ள எயில் என்றேனும் கொள்ளலாம்.

† முத்துப்பேட்டைக்கு வடக்கே 2 மைலில் உள்ளது.

‡ புதுக்கோட்டைச்சீமையைச்சார்ந்த திருவரங்குளச்சாஸனத்தில், இந்நிம்பவனப் பிரஸ்தாபம் வந்துளது (Ep. Rep. 280 of 1914).

கிராமம் என்பது அப்பக்கத்துள்ள சங்கரனூர்குடிக்காடு என்ற சிற்றூராகவேண்டும். நெல்மெலி, நெல்வேலி என்ற ஊர்களும் இப்பிரதேசத்தில் உள்ளன. சாஸனத்துக்கண்ட நெல்வேலி என்பது, இவ்வூர்களில் ஒன்றாயின், உதயசந்திரனால் எதிர்க்கப்பட்ட சபார்தலைவனுடைய நாடும், பாண்டிமண்டலத்தை ஒட்டியதாதல்வேண்டும்.§ டாக்டர் ஹூல்ஷ் துரையும், இப்போரைத் தென்னாட்டுநிகழ்ச்சியாகவே கருதுதல் காணலாம். இவற்றால், பாண்டிநாட்டின் எல்லைப்புறத்துப் போர்க்களங்களையே ஷை சாஸனம் மிகுதியாகக் கூறுவதிலிருந்து, பல்லவ சேனைக்கும் பாண்டியனுக்கும் பலபோர்கள் தென்னாட்டில் நடந்தன என்று தெரியலாம். இவ்வாறே, திருமங்கையாழ்வாரும் பாண்டியனுடன் பல்லவன் நடத்திய போர்களையே பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்துள் மிகுதியாகக் கூறியிருத்தல் ஈண்டு ஒப்பிட்டறியத்தக்கது.

ஆழ்வார் நந்திபல்லவனது போர்களையே கூறினராயின், அவன் நிஷாதராஜனாகிய பிருதுவீவியாக்ரனுடன் வடநாட்டில் நிகழ்த்திய பெரும்போரையும் அவர் கூறியிருக்கவேண்டும் என்று ஐயரவர்கள் கூறுகின்றார்கள். தாம் அவதரித்த தென்னாட்டில், தங்காலத்தே நிகழ்ந்த செய்திகளை, அறிந்தவாறு கூறியவராகத் திருமங்கைமன்னனை நாம் கொள்வது முறையேயன்றி, அவரைச் சரித்திரவாசிரியராகவே கருதிவிடுதலுங் கூடுமோ?

"விண்டவரிண்டைக்குழாமுடனே விரைந்தாரிரிய (4)
"கறையுடைவாண்மறமன்னர்கெட" (9)

என்று பொதுவாக ஆழ்வார்கூறிய பகைவர்செய்திகளில் அஃது அடங்குமென்றே கொள்ளற்குரியது. கருவூரிற் பாண்டியனை அஞ்சும்படிசெய்த செய்தி சாஸனத்தில்லையேனும், வேறொருபடையினுதவியால் வேறொருகாலத்தில் அது நிகழ்ந்திருக்கக்கூடாதென்று சொல்வதற்கில்லை. மேற்கூறியகாரணங்களால், பல்லவமல்லன்செயல்களாகக்கண்டவற்றுடன் ஆழ்வார்கூறியவை பெரும்பான்மை ஒற்றுமைபெறுவதும், அதனால், அவன்செய்திகளையே ஆழ்வார் பாடினவராதல்வேண்டுமென்பதும் பொருந்தியவையாதல் கண்டுகொள்க.

---

§புதுக்கோட்டை அறந்தாங்கிப் பிரதேசங்களிலுள்ளஜமீன்கள் பல, கள்வர்தலைவர்தாட்சியின்கீழ் இன்றும் உள்ளன.

இனி, பல்லவனை வெற்றிகொண்டவனாகச் சாஸனவழியாலும் ஆழ்வார்வாக்காலும் அறியப்பட்ட வயிரமேகனைப்பற்றி ஆராய்வோம். "வயிரமேகன் தன்வலி தன்புகழ்சூழ்ந்த கச்சி" என்பது ஆழ்வார் அருளிய தொடர். இதற்கு, "வயிரமேகன் வலியும் அவன் புகழுஞ் சூழ்ந்துள்ள காஞ்சீபுரம்" என்பது பொருளாம். வயிரமேகன் பல்லவனை வென்ற செய்தி நிகழ்ந்து ஒருநூற்றாண்டுக்குப் பின்பு, ஆழ்வார் வாழ்ந்தவர் என்று ஐயரவர்கள் கருதுவது உண்மையாயின், அவ்வயிரமேகன் கீர்த்தியோடு அவன் பலமுங் காஞ்சியைச் சூழ்ந்திருந்தன என்று பெரிதும் பிற்பட்டவரொருவர் பாடும்படியும் நேருமோ? தங்காலத்து விளங்கியுள்ள பல்லவனைவிட்டொழித்து எத்தனையோ மாறுபாடடைதற்குரிய ஒரு நூற்றாண்டுக்குமுன், வேற்றரசனொருவனுடைய வலிமை சூழ்ந்திருந்ததாகக் கச்சிப்பதியை அவர் சிறப்பிக்கவேண்டிய ஆவசியகந்தான் என்னையோ? இத்தொடரின் இயற்கையமைப்பைச் சிந்திப்போரெவர்க்கும், அவ்வயிரமேகன் ஆழ்வார்காலத்துக்குச் சிறிதேனும் முற்பட்டவனென்று கருதஇடமிராதென்றே சொல்லலாம். அன்றியும் 'வயிரமேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி' என்று வேறொருவர் வலியும்புகழும் கச்சிக்குரியவையல்ல—என்பதுபட வற்புறுத்திக்கூறுவதாலும், அவ்வயிரமேகனது கீர்த்திப்ரதாபங்களை ஆழ்வார் நேரில் அறிந்தவரென்பது காதலாமலகமாகும். ஐயரவர்களது மற்றொருகருத்தின்படி, வயிரமேகன் பல்லவனேயாயின், பல்லவனுடைய புகழும் வலிமையுமே அவன் உள்ளூரைச் சூழ்ந்திருந்தன என்று ஒருகவி விசேடிப்பதால் வியக்கத்தக்கதென்னே? அதனால் 'தன்புகழ் தன்வலி சூழ்ந்த' என்று தெளியுபட ஆழ்வார்கூறும் கீர்த்திப் பிரதாபங்கள் வெளியிருந்து படையெடுத்துவந்த வெற்றிவேந்தனொருவனைப்பற்றியன வென்பதே பெரிதும் பொருத்தமாதலுங் காணலாம்.

III. பரமேச்சுரவிண்ணகரப் பதிகத்துப் புகழப்படும் பல்லவனுக்கு நெடுங்காலத்துக்குப் பின்பே ஆழ்வார் வாழ்ந்தவராதல்வேண்டும் என்று ஐயரவர்கள் முடிவாக நம்புவதற்கு—பண்டு, பண்டொருகால், முனநாள், அன்று என்ற சொற்களை அவ்வரசன் போர்ச்செயல்களுடன் இணைத்து ஆழ்வார் பாடுதலே முக்கிய ஆதாரங்களாயுள்ளன. இதன் பொருட்டு அவர்கள் தம் கருத்துக்கிசைந்த மேற்கோள் பலவற்றை

எடுத்துக்காட்டியுள்ளார்கள். ஆனால், இச்சொற்கள் யாவும், அவர்கள் கருத்தின்படி, நூற்றாண்டுகளுக்குமுன் னிகழ்ந்த செய்திகளைத்தான் குறிக்கவேண்டுமென்னும் நியதியில்லை; அவையெல்லாம், 'சென்றகாலம்' என்னும் பொருள்கொண்டு, ஒருவன் வாழ்நாளுட் சென்ற காலத்தையும் தலைமுறைசென்ற காலத்தையும் பொதுவாககவே காட்டவல்லன. "பண்டு மின்று மேலுமாய்" என்ற திருமழிசையாழ்வார்வாக்கினும் அச்சொல் (திருச்சந். 22) இறந்தகாலமென்னும் பொருளில் வழங்குதல் காண்க. ஒருவன் வாழ்நாளுள்ளே, சிலபல ஆண்டுகள் கழிந்ததை மட்டுமன்றி, சிலமாதங்கள் நாள்கட்கு முன் நிகழ்ந்தவற்றைக் குறிப்பதற்கும் அச்சொற்கள் முன்னோரால், வழங்கப்பட்டிருத்தலை அடியில் வரும் மேற்கோள்களிற் பரக்கக்காணலாம்:—

[சிலபல ஆண்டுகட்கு முன்னிகழ்ச்சி]

"பண்டும் பண்டும் பாடுந ருவப்ப....
பெண்டிருந் தப்பதங் கொடுக்கும்" (புறம். 151)

"பண்டும் பண்டுங் கலங்கவிழ் மாக்களை
யுண்டே மவர்தம் முறுபொரு ளீங்கிவை" (மணிமே. 8-18)

"பண்டறி கிளையொடு பதியுங் காணாள்" (ஷை 8-15)

"பண்டுகாம ரானவாறும் பாவையர் வாயமுதம்
உண்டவாறும் வாழ்ந்தவாறு மொக்க வுரைத்திருமி"
(திருமங்கைமன்னன். பெ. தி. 1, 3, 5.)

"பண்டிவ னயனங்காய்" (ஷை. 3, 7, 2)

"வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்"
(ஆண்டாள். திருப்பாவை 15)

"பண்டே யெரிமுன் னுன்னைப் பாவி தேவி யாகக்
கொண்டே னல்லேன் வேறோர் கூற்றந் தேடிக் கொண்டேன்"
(கம்ப. நகர்நீங்கு. 48)

"(விருந்தினர்) இருவகையர்; பண்டு அறிவுண்மையிற் குறித்து வந்தாரும் அஃதின்மையிற் குறியாதுவந்தாருமென". (குறள். 43. பரிமேலழகருரை).

[சிலபலமாதங்கள் நாள்கட்கு முன்னிகழ்ச்சி]

"பண்டும் பலபல வீங்கிருள் காண்டும்" (திருவிருத்தம். 49)

"பண்டறிசுட்டு" (சீவக. 1445 நச்.)

"பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு" (குறள். 1083)

"நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்றா ரேறு மடல்" (ஷ. 1133).

"பண்டிப் புனத்துப் பகலிடத் தேனலுட்
கண்டிக் களிற்றை யறிவன்மன்" (யாப். வி. பக்.-102.)

"பண்டையில் சிறப்பால் அவன் பிரிதற்குறிப்புக்காட்டி
அச்சஞ்செய்தலுடைமை" (குறள். 1152 பரிமே).

"பண்டு கூரியதோர் வாண்மன் (நன். மயிலைநாதருரை.
பக். 237, 295)

"பண்டை யளவன்றி" (ஐங்குறு, 93 உரை).

"முன்னுந் தொழத்தோன்றி....
இன்னுந் தொழத்தோன்றிற் றீதேகாண்" (பிறை) (யாப். வி.
பக். 402.)

"வந்தணங்கா மன்னர்தேய முன்னாள்
(இறைய. அகப். 156. உதாரணப்பாட்டு)

"முன்னாள் முறைமையின்....அல்லிடைப் பெயர்ந்தனர்" (சிலப்)
"முன்னொருகா லென்மகனைக் கண்டேனென் கண்குளிர"
(சீவக. 1807)

"அணிநிற மாப்பக டுந்திவந் தார்....அன்றவிய....
வேல்கொண்ட கோன்" (இறைய. அகப். 158).

"அன்றுநீ செல்லக் கிடவென்று யாருயிர்விட்
டின்றுநீ வானுலக மெய்தினாய்"
(பொய்யாமொழியார்: தமிழ்நாவலர்சரிதை).

இவ்வாறே வேண்டிய மேற்கோள்கள் ஐயாவவர்கள் கருத்துக்கு மாறாக அமைந்துள்ளவற்றை உதகரிக்கலாகும். ஆதலால் பண்டு முதலிய சொற்களைக்கொண்டு ஒரு முடிவுகட்டுதல் பொருந்தாதென்க, பல்லவமல்லன் அறுபது வருஷங்கட்கு மேல் ஆட்சிபுரிந்தவனென்பது, சரித்திரப் பிரஸித்தமாயுள்ளது. அவனது ஆட்சியின் தொடக்கத்தில் நடந்த போர்களையே உதயேந்திரசாஸனமும் பரமேச்சுரவிண்ணகரப்பதிகமுங் கூறுவன. இவனாட்சிமுடிவுக்குப் பத்துப்பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்புதான் வயிரமேகனாகிய தந்திதுர்க்கன் இவனை வென்றவனென்று அறியப்படுகின்றது. இதனால், திருமங்கைமன்னன், பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்தைப் பல்லவமல்லனது ஆட்சியிடையிலும், அட்டபுயகரப்பதிகத்தை வயிரமேகன் வெற்றிகொண்ட காலமாகிய கி.பி. 754லும் பாடினவராதல்வேண்டுமென்று கருதுவது, ஒருபோதுந் தவறான ஊகமாகாதென்க.

வயிரமேகன் என்ற பெயர்க்காரணத்தைப்பற்றி எழுதும்போது, அது, தோற்றவனான பல்லவர்குலப்பெயரைத் தந்திதுர்க்கன் தன் வெற்றிக்குறியாகத் தரித்ததாகலாம் என்று ஐயாவவர்கள் கருதுகிறார்கள். வென்றவன்பெயரைத் தோற்றவன் தானடங்கியதற் கறிகுறியாகத் தரித்

தல் பொருந்துமேயன்றித் தோற்றவன்பெயரை வென்றவன் தரிப்பதென்பது அருமையேயாகும். சோளாந்தகன், கோளாந்தகன் என்பதுபோல, வேண்டுமாயின் வயிரமேகாந்தகன் என்று வெற்றிப்பெயர் புனைவதே பழையவழக்குக்கு ஏற்றது. பல்லவனை வெற்றிகொண்ட வயிரமேகன் ஆகிய தந்திதுர்க்கன், பின் பகைமைநீங்கித் தன்மகள் ரேவாவை அப்பல்லவனுக்கே யளித்தானென்றும், அவளிடம் பல்லவமல்லனுக்குப் பிறந்த மகனே தந்திவர்மனென்றும் சிலரால் ஊகிக்கப்படுவதால், தாய்வழிப்பாட்டனை அவ் வயிரமேகன்பெயரைப் பின்வந்த பல்லவர்சிலர் தரிக்கலாயினர்* என்று ஒருகாற் கொள்ளலாமேயன்றி, மாறிக்கூறுவது சிறிதும் பொருந்ாதென்க.

பல்லவமல்லன்வழியிற் சிலரும் வயிரமேகன் என்று பெயர்தரித்திருப்பதாகத் தெரியவருவதால், அதனைப் பற்றிக்கொண்டு அவர்களில் ஒருவனை ஆழ்வார் கூறினவராகவேண்டும் என்று ஆதாரமில்லாமல் பொதுப்படையாக நவிந்துகூறும் பொருள்களினும், பல்லவனை வெற்றிகொண்டவனைச் சாஸனத்தாலும் ஆழ்வார்வாக்காலும் தெளிவாக அறியப்படுபவனும் முன்னவனுமாகிப் வயிரமேகனையே கொள்வது எத்துணை நேர்மையும் சிறப்புமுடைத்து என்பதை அறிஞர் சிந்திப்பார்களாக.

மு. இராகவையங்கார்,
திருவல்லிக்கேணி.

---

*பின்வந்த பல்லவர்க்குத் தந்திதுர்க்கனுகிய வயிரமேகனென்றபெயர் வழங்கலாயிற்று என்பது, வயிரமேகபுரம், வயிரமேகச்சதுர்வேதிமங்கலம் போன்ற ஊர்கள் வழங்கலால் அறியலாம்.

ஸ்ரீ

# சிலப்பதிகாரவாராய்ச்சி.

(உக-ஆம் தொகுதியின் ருஎய-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

## (பதிகம்)

இனி, இந்நூலின் பதிகம் ஆராய்வானெடுத்துக்கொள்ளற்பாலது. பதிகமென்பது பாயிரத்தின் பரியாயப்பெயர்களுளொன்று. பாயிரமென்பது வரலாறு. அதுதான் பொதுவுஞ் சிறப்புமெனஇருவகைத்து. "பதிகக்கிளவி பல்வகைப்பொருளைத்-தொகுதியாகச் சொல்லுதல்தானே" என்றாராகலின், ஐந்தொதவும் பதினொரு சிறப்புமாகிய இலக்கணங்கள் பலவும் உள்ளுறுத்துக்கூறப்படும் பாயிரத்திற்குப் பதிகமென்னும் பெயர் சாரணக்குறியாய் எய்திற்றென்பர். ஒருசார் வடநூல்வல்லார் இதனை ப்ரதீகம் என்னும் வடசொற்சிதைவென்றுங் கூறுப.

அஃதாயின், இருவகைப் பாயிரத் திலக்கணங்களையும் இப்பதிகச் செய்யுளுள் வகுத்துக்காணுமாறில்லையே எனின்; இஃ திந்நூற்கேயுரிய பொருள்களை யுணர்த்துகின்றமையிற் சிறப்புப்பாயிரத்திலக்கணங்களையே பெரும்பான்மையாக அமையப்பெற்றுள்ளதென்க. அற்றேல், இதனையும் பெயர்கூறுமுகத்தாற் சிறப்புப்பதிகமெனல்வேண்டாவோ எனின் அஃதன்னதாதல் அதனுட்பொருளைநோக்கவே எளிதினறியக் கிடத்தலின் வேண்டாவென்பது.

நிற்க: இந்நூனுதல்பொருளும், இது கேட்டலாற் பயனும், ஆக்கியோன்பெருமையும், நூலின்பெருமையும் இன்னோரன்ன பலகுறிப்புகளும் நூலுணர்ச்சிபெறுதற்கு வேண்டுவனவற்றைத் தன்னகத்துடைமையின் இத்தொடர்நிலைச்செய்யுட்கு இப்பதிகம் இன்றியமையாச் சிறப்பினதாகின்றது. அவற்றுள் இக் காப்பியஞ்செய்தாரிவரென்பதூஉம் அவர் பெருமை இத்துணையதென்பதூஉம் முன்னருணர்த்தற்குரியன. "குடக்கோச்சேரலிளங்கோவடிகட்கு" எனவும், "உரைசாலடிகளருள" எனவுஞ் சொன்னாராகலின் இந்நூல்செய்தாரிளங்கோவடிகளென்பது விளங்கிற்று. அவர் துறவியாதலின் அடிகளெனப்பட்டார்; இராச

போகத்தையுந் துறந்தவராதலிற் கோ (ஆகிய) அடிகள் என்று சிறப்பிக்கப்பெற்றார்; அங்ஙனந் துறவுபூண்டதும் மிகவும் இளையபருவத்தேயாகலின் இளங்கோவடிகளெனப் பெயர்சிறந்து விளங்கினரென்க.

இக்கருத்தே "குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த குடக்கோச்சேர லிளங்கோவடிகட்கு" என்பதனாலும் விரித்துரைக்கப்படுகிறது. உலகின்கட் பெருமிடியுற்றானொருவன் துறவடைதல் எளியசாரியமே; ஆயினும், அரசச்செல்வந் துய்த்துநின்றார் பற்றறுதல் மிகவும் அரியதொன்றாம். அயல்வேந்தரடிக்கீழொதுங்குஞ் சிற்றரசுரிமையாயின் அதன்கட் பற்றுவிடுதல் ஒருவர்க்கமையும்; ஆயினும், வஞ்சிமூதூர் மணிமண்டபத்துத் தென்னர் செம்பியர் தன்னடிபோற்றச் சிங்கஞ்சுமந்த பொங்கணைமிசை வீற்றிருந்து செங்கோலோச்சுங் குடதிசைக் கோவாதற்குற்ற பேரரசுரிமையாயின் அதனை வெறுத்துவிடுதல் யார்க்குமமையாது. இராசபோகநுகர்ந்தாரும் நெடுங்காலங்கழிந்தவாறே மூப்படைந்து உலகியலறிவுநிரம்பித் துறவுமேற்கொள்ளுதல் ஒருதலையானியலும்; ஆயினும் சிறுகாலையே துறத்தல் எளிதினியலாதாம். எல்லாவாற்றலுந் தப்பாற்பெற்று ஒருகாலாக உலகத்தைத் துறந்துவிடுதல் ஒருவர்க் கெளிதி னெய்துவதே; ஆயினுந் தவவுருத்தாங்கி உற்றநோய்நோன்றல் உண்டிசுருக்கல் முதலிய ஒழுக்கநெறிக்கண் வழுவாதுநிற்றல் எத்திறத்தானும் எய்தலாவதின்று. துறவுபூண்டொழுகுவார் எஞ்ஞான்றும் தாம் புலப்பகையை வென்றிருத்தல் காட்டின்கணாயின் ஒருவாற்றாற்கூடும்; ஆயினுந் துறக்கப்பட்ட புலன்கண்மேற் பழையபயிற்சிவயத்தான் நினைவுசெல்லுதற்குப் பொருந்திய, முன்னரின்பந்துய்த்தவிடத்திலேயே மீட்டும் நிலைபெற்றிருத்தல் எல்லார்க்குங் கைகூடாது. அல்லாமலும், இவற்றுளோரோவொன்று ஓரொருவர்க்கு வாய்த்தலுங்கூடும்; ஆயினும் அவையனைத்தும் ஒருவர்க்கொருங்கே கைவரப்பெறுதல் அரிதினுமரிதாம். ஆதலின் இந்நூலாசிரியருடைய அரும்பெருந்தவத்தை என்னென்றுரைப்பது?

இன்னும், "உரைசாலடிகளருள மதுரைக்கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்" என்பதில், உரைசாலடிகளென்று கூறியுள்ளதைநோக்க அவர் துறவின்பெருமையேயன்றிப் புலமையானும் புகழ்படைத்தவரென்பது தெளிவாகின்றது. அவர் தமது இயல்பானகருணையினால் இதனை

இயற்றினாரென்பது தோன்ற அருளவென்றும், சங்கப்புலவராகிய சாத்த னாரினும் அவர் மேம்பட்டவரென்பதுதோன்றச் "சாத்தன்கேட்டனன்" என ஒருமைமுடிபுகொடுத்தும் கூறப்பட்டது. இதனால் இவ்வரிய பெரிய தமிழ்நூலை இயற்றுதற்கு, வெறுப்புவிழைவற்று முத்தமிழ்ப் புலமையும் வித்தகக் கவிதையும் ஒருங்குவாய்ந்துயர்ந்த, அடிகள் ஆற் றல்சான்றவரேயென்பது நன்கு துணியலாயிற்று.

இனி, இச் சிலப்பதிகாரத்தைச் செவியேற்றிருந்த சங்கப்புலவ ராகிய சாத்தனார்பெருமைகூறவே, நூலின்பெருமையும் உடன்கூறிய தாகும். "தண்டமிழாசான் சாத்தன்" எனவும், "நன்னூற்புலவன்" எனவும் இவ்வாசிரியரே அவரை நன்குமதித்துள்ளார். அன்றியும், அவர் அக்காலத்துச் சேரவரசன் செங்குட்டுவனுடைய அபிமானத்தாற் சிறப்புற்றிருந்தா ரென்பதும் அறியப்படுகிறது. அவையேயன்றி அவர் பிறர் நூலுட் பிழைகாணுந்தோறும் மனநொந்து தமது தலையிற் குத்திக்கொள்வரென்றும், அதனாலவர்தலை எப்பொழுதுஞ் சீயொழுங் கருமையின் அவர்க்குச் சீத்தலைச்சாத்தனாரென்று பெயராயிற்றென்றுங் கூறுப.* அவ்வாறு பிறர் நூலுட் குற்றங்காணுமாற்றலில் அவர் பெரி துஞ் சிறந்தவரென்பது சங்கப்புலவர்களாலும் பாராட்டப்பெற்றதொன் றும். ஆகலான் அத்தகைய நல்லிசைப்புலவரும் இந்நூலினை விரும் பிக் கேட்டாரெனவே அது குற்றத்தி னீங்கியதென்பது சொல்லா மையே அமைந்தது. இதன்கண் வழுவின்மைகண்டவாறே சாத்தனார் தலை சீயொழுகுதலைத் தவிர்ந்ததென்பது தோன்றுதற்பொருட்டே, ஆசிரியர் இப்பதிகத்துள், சீத்தலைச் சாத்தன் கேட்டனன் என்னாது, "கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்" என்பாராயினரெனக. இதனா னன்றே அது "முழு(த்)தும் பழுதற்ற முத்தமிழின் பாடல்" என்று போற்றப்பட்டு இன்றுகாறும் நின்று நிலவுவதாயிற்று?

---

*இவ்வாறன்றி, சீத்தலையென்னுமூரிலுள்ள ஐயனார்பெயராகிய சீத்தலைச் சாத்தன் என்பதே அவரது இயற்பெயராயிற்றென்று கூறுவாருமுளர். அது பொருந்தாது. "இயற்பெயர் சினைப்பெயர்" என்னுந் தொல்காப்பியச் சூத்திர வுரையின்கண் உரையாசிரியரும், சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் "தலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு" என்ற ஆன்றோர் கருத்துக்கியைய, சீத்தலைச் சாத்தன் என்பதனைச் சினைமுதற்பெயராகக்கொண்டனராகலிற் சீயோடுகூடின தலையையுடைமையா னவ ரப்பெயர்பெற்றனரென்பதே தொல்லாசிரியர் துணி வா மென்க.

அற்றேல் அஃதாக: "தோன்றுதோற்றித் துறைபலமுடிப்பினுந்—தான்றற்புகழ்தல்தகுதியன்றே" என்றாராகலின், இவ்வாசிரியர் இப்பதிகத்துக்கண் தாமே தமது நூலையுந் தம்மையும் புகழ்ந்துகோடல் சால்புடைத்தன்றாம் பிறவெனின்; அறியாது கூறினாய். "தான்றற்புகழ்தல் தகுதியன்றே" என்ற ஆசிரியர் பனம்பாரனார் தாமே அதனையடுத்து,—

"மன்னுடைமன்றத்தோலைத்தூக்கினுந்
தன்னுடையாற்றலுணராரிடையினும்
மன்னிய அவையிடைவெல்லுறுபொழுதினுந்
தன்னைமறுதலைபழித்தகாலையுந்
தன்னைப்புகழ்தலுந்தகும்புலவோர்க்கே"

என ஒரோவழி அது குற்றமாகாமை யுணர்த்தின ராகலானும், பிறருமவ்வாறு தாமே பாயிரமிட்டுக்கொண்டார் பலராமாகலானும், அவையெல்லாந் தற்சிறப்புப்பாயிரமென வழங்கப்பெறுதலானும், வடநூலுள்ளுந் தன்னைப் பிறன்போலப் புகழ்ந்து நாந்திகூறுதல் வழக்காறென்பவாகலானும், முற்றத்துறந்தமுனிவராகிய அடிகள் தம்மைப் படர்க்கையிடமாகவைத்துக் கூறிக்கொண்டமையால் அக்குற்றம் தம்மைச் சாராவண்ணம் ஒழிக்கவல்லுநராகலானும் ஈண்டு நூலாசிரியரே பதிகமுங்கூறியது தகுதியுடையதே என்க.

இனி, நுவல்பொருள்களுள் முதன்மைவாய்ந்த கோவலன் கண்ணகிகளின்கதை ஆசிரியரறிவுக்கெட்டிய வரலாற்றையும் இப்பதிகத்துள்ளே காணலாம். "பொலம்பூவேங்கை நலங்கிளர் கொழுநிழல்" என்பதுமுதல் "இரும்பூது போலுமிஃ தறிந்தருணீ" என்பதுகாறும் குன்றக்குறவர் கூறியதும், பின்னர் அதன் விரிவெல்லாம், "யானறிகுவனதுபட்டது" என்று தொடங்கிக் "கோட்டமில் கட்டுரை கேட்டனன் யான்" என்ப திருவாசகச் சாத்தனாருணர்த்தியதுமாகிய வரலாறுகள் குறிக்கப்படுகின்றன. இதனால், குன்றக்குறவர்கூற்றின்வாயிலாகவும் சாத்தனார் வாய்மொழியின்வழியாகவும் வந்த பொருள்களை அடிப்படையாகக் கொண்டுதோன்றிய திந்நூலென்பது தெளிவாகின்றது.

அஃதாக, யார்வாயிலாக வந்ததாயினுமென்? அவ்வாலாறு ஈண்டைக்கு வேண்டுவதில்லையாமாலோ வெனின்;—அவ்வரலாறு கேட்கவே இப்பனுவலுட் பயிலுங் கதையினுடைய சிறந்த தன்மைகளை ஒருதலை

யாக மாணாக்கன் உணருமென்க. அஃதெங்ஙனமெனிற் கூறுவன். இக்கதைநிகழ்ச்சியினிடையே மானுடர்முன்னிலையிற் றெய்வந் தோற்றஞ் செய்தலும், ஏவல்கேட்டலும், பழம்பிறப்புணர்த்தலும், விண்ணுலகேற வெடுத்துச்சேறலும் பிறவுமாய உலகியல்கடந்த அற்புதச்செயல்கள் பற் பல காணப்பெறுதல் கற்றோர்பலரு நன்கறிந்தது. ஆகவே, அவை உண் மையி னிகழ்ந்தனவோ அன்றோவென ஐயுறவெய்தியமாணாக்கன் குன்று முட்டிய குரீஇப்போலப் பெரியதோ ரிடருறு நிற்கும். ஆகலா னவ் வைபத்தினை நீக்குவான் முற்பட்ட ஆசிரியர் இவ்வரலாறுரைத்தமையாற் பிறவாயில்களானும், அவையாவும் வாய்மையேயாதல் வற்புறுத்தின ரென்க.

அற்றேல், ஆசிரியர் துறவியாதலிற் பொய்கூறா ரென்பதுகருதி, மாணாக்கன் அவ்வையநிகழ்ந் துழி அதனைத் தானே அகற்றிக்கொள்ளு மாகலானும், அடிகள்வாக்கினுஞ் சிறந்தது பிறிதொன்றின்மையின் வேறுசான்று வேண்டாவாகலானும், ஈண்டுக் குறவர்கூற்றுஞ் சாத்த னார்கூற்றுமாவனவற்றைக் கரிபோக்குதல் மிகையேயாம்பிறவெனின்:— அற்றன்று. யாதொன்றன் உண்மையுணர்தற்கண்ணும் ஒருவர்மாற்ற மே தேறப்படாது. இருவராயின் ஒருவர்க்கொருவர் தம்முளியைந்து ஒருபொருளை மாறுபடக்கூறலுங் கூடுமாகலின் அவர்கூற்றுந் தெருளற் பாற்றன்று. இருவர்க்குமேற்பட்ட பலராயின், அனைவரு நெஞ்சொற் றுமைப்பட்டு உண்மையிற்றிறம்பியுரைத்தலும், உரைத்தாலது நீடுநிற் றலுங் கூடாமையின் அங்ஙனம் தெளியப்பட்ட உண்மை ஒருபொழு தும் புரைபடுவதின்றாம். ஆகலின், ஈண்டு இவ்வாசிரியர் தாம் கதை யுட் கூறப்புகுவனவற்றிற்குச் சாத்தனாரையுங் குன்றக்குறவரையுங் கரி போக்கினாரென்பது குற்றமாகாமை யுணர்க.

அன்றியும், பின்வருமாற்றானு மவர்க் கதுவே கருத்தாத லறியப் படும்.

> "குன்றக்குறவரொருங்குடன்கூடிப்
> பொலம்பூவேங்கைநலங்கிளர்கொழுநிழ
> லொருமுலையிழந்ததிருமாபத்தினிக்
> கமரர்க்கரசன்றமர்வந்தீண்டியவள்
> காதற்கொழுநனைக்காட்டியவளொடெங்

கட்புலங்காணவிட்புலம்போய
திறம்பூதுபோலுமஃ தறிந்தருணீயென"—

என்னு மிவ்வடிகளின் பொருட்குறிப்பு ஈண்டாராயத்தக்கது. பல் வினத்தோடும் பழகுதலாற் சூதும் வாதும் பிறவுமாய சூழ்ச்சியில்வல்ல ஏனை நகரமாந்தர்போலாது மலைவாழ்நராகிய மாக்கள் என்ஞான்றும், வஞ்சனையற்று உள்ளதை உள்ளவாறுணரும் ஒரேதன்மையுடையவ ராவர். அவரும், ஒருவரிருவராயின் ஒரோவழி உண்மைபிறழ உரைத் தலுங்கூடும்; அவ்வாறன்றி அரசனும் அடிகளுங் கூடியமுன்னிலையிற் பலரும் ஒரேபடியாகப் பகர்ந்தனராயின், அதன் உண்மையில் ஐயப்படு தல் என்னை? இனி, அப்பலர்தாமும் ஒருவர்பின் னொருவராய்ப் பலகாலாக வந்துரையாடாது அனைவரும் ஏககாலத்திலே ஒன்றுகூடினர். அவ்வாறு அவர் ஒரேகாலத்தி லுரைத்ததும், பிறர் கண்டுகூறக் கேட்டுவந்ததன்றிக்கே தாமே கட்புலமாகக் கண்டதாயிற்றெனின் அத னுண்மை உறுதிபெறுதல் உரைக்கவும்வேண்டுமோ?

இன்னும், சாத்தனூர்கூறியதாக உரைத்தவாலாற்றினும் இதற் கேற்ற குறிப்புகள் காணப்படுத லறியலாம் "அவனுழையிருந்த தண் டமிழ்ச் சாத்தன்" என்புழி, உரையிற்கோடலால், சாத்தனூர் பரிசில் காரணமாகவந்து செங்குட்டுவனிடத் திருந்தாரென்பது பெறப்பட் டது.

"வரிசைக்குவருந்துமிப்பரிசில்வாழ்க்கை
பிறர்க்குத்தீதறிந்தன்றூவின்றே"—

என்பவாகலின் அத்தகைய பரிசில்வாழ்க்கையை மேற்கொண்ட அவரும் தீமையிலாதனவே சொல்லும் வாய்மையுடையவராகலிற் சிறந்தசான் றாதற் குரியவராயினர். 'குன்றக்குறவர்கூறிய இந்நிகழ்ச்சி இறும்பூது பயப்பதாயினும் அஃதுண்மையேயாதல் யானறிவேன்' என்னுங் கருத் தால் "யானறிகுவ னது பட்டது" என்றெடுத்துப் பின் நிகழ்ந்தன யாவும் அவர் கூறியதாகச் சொல்லப்படுகிறது. அன்றியும் "வெள்ளி யம்பலத்து நள்ளிருட்கிடந்தேன்" "கோட்டமில் கட்டுரை கேட்டனன் யான்" எனவருவனவும் இதனையே வலியுறுத்துகின்றன. ஆதலின் இவ்வாலாறுகளால் ஆசிரியர் தாம் நூலுட் கூறலுற்ற தொழினிகழ்ச்சி

களின் உண்மையறிவித்தற்குரிய சான்றின்வலிமை கூறினாராகவே கொள்ளத்தக்கது. இனி, இக்காப்பியத்தின் கதைச்சுருக்கமுணர்த்துவானெண்ணிய ஆசிரியர்கருத்தும் இவ்வரலாறுகளுரைப்பவே நிறைவேறியதாயிற்று. குன்றக்குறவர் கதையின்ஒருபாகத்தைத் தாமறிந்தவாறு கூற எஞ்சியபகுதியைச் சாத்தனார் சாற்றிமுடித்தார். ஆகவே இரண்டனையுங் கூட்டியுணர்வார்க்குக் கதைச்சுருக்கமுழுமையும் உரைக்கப்பட்டதாகுமென்பது வெளிப்படை.

இது நிற்க: நூற்கும் நூல்செய்தோனுக்குங் கிழமைகூறுதலும் பாயிரத்தின் ஒருறுப்பாகுமென்பர். அவ்வியைபும் இவ்வரலாற்றினுள்ளே அறியக்கிடக்கின்றது. குன்றக்குறவரெல்லாருந் திரண்டு சென்று, 'எமதூர் மலைப்பக்கத்துப் பொன்போலும் பூவினையுடைய வேங்கைமரத்தின் நிழற்கண்ணே ஒருமுலையிழந்துவந்தாள் ஒரு மாபத்தினி; அவள்பொருட்டு இந்திரன்றமர் ஈண்டிவந்து அவள் கொழுநனைக் காட்டி அவளோடும் அவர் எம் கட்புலங்காண விட்புலம்போயவது ஓர் அதிசயமாயிருந்தது; அதனை நீயறிந்தருளுவாயாக; என்று இளங்கோவடிகட்குக் கூறின வரலாறுரைக்கவே, அதுகேட்டு வியந்த அடிகள் அப்பத்தினிக்கடவுள்பொருட்டால் இச்செய்யுளையிபற்றிச் சிறப்புச்செய்தற் குரிமையுடையராயினரென்பது தெளிவாயிற்று. கண்ணகிதேவி தன் கடவுட்டன்மையைக் குன்றக்குறவரறியத் தமது மலைநாட்டகத்தே நிலையிட்டுச்சென்றாளாகலிற் சேரன் செங்குட்டுவனும் அவ்வியைபுபற்றியே அத்தெய்வத்திற்குக் கோயிலெடுப்பித்தனனென்பதறியப்படுகிறது. அவ்வாறு தம் முன்னோன் அவட்குக் கோயிலியற்றினாற்போலவே, அச்சேரற்கிளவலாகிய அடிகளும் "சந்திபொருத்தித் ததுஞ்சீர் கெடா தடுக்கிப்—புந்திமகிழுறப்புதவணித்தாய்"ப் பத்தினிதேவியின்சாந்நித்தியம் பெற இச்செய்யுளைச்செய்து தமது கடமையையும் நிறைவேற்றுவாராயினர்.

இங்ஙனம் அவர் இதனை இயற்றுதற் கியைபுடையாதல் பிறிதோராற்றானும் இத் தொடர்நிலைச்செய்யுளிறுதிக்கட் கூறப்பெற்றுள்ளது.

"வேள்விச்சாலையில்வேந்தன்போந்தபின்
யானுஞ்சென்றேனென்னெதிரெழுந்து
தேவந்திகைமேற்றிகழ்ந்துதோன்றி

வஞ்சிமூதூர்மணிமண்டபத்திடை
நுந்தைதாணிழலிருந்தோய்நின்னை
யரசுவீற்றிருக்குந்திருப்பொறியுண்டென்
றுரைசெய்தவன்மேலுருத்துநோக்கிக்
கொங்கவிழ்நறுந்தார்க்கொடித்தேர்த்தானைச்
செங்குட்டுவன்றன்செல்லல்நீங்கப்
பகல்செல்வாயிற்படியோர்தம்முன்
னகலிடப்பாரமகலநீங்கிச்
சிந்தைசெல்லாச்சேணெடுந்தூரத்
தந்தமிலின்பத்தரசாள்வேந்தென்
றென்றிறமுரைத்தவிமையோரிளங்கொடி
தன்றிறமுரைத்ததகைசால்நன்மொழி"

எனவருமடிகளின்பொருளீண்டு நோக்கற்பாலது. இதன்கண் "என்றிறமுரைத்த இமையோரிளங்கொடி—தன்றிறமுரைத்த தகைசால்நன்மொழி"என்றது இச்சிலப்பதிகாரத்தைச் சுட்டிக்கூறியதாகும். ஆகவே, இதனால், பத்தினிக்கடவுட்கு நடுகற்செய்துழி ஆசிரியர்தாமும் உடனிருந்தாரென்பதும், அஞ்ஞான்று தெய்வந்தோன்றி அடிகளின் றிறத்தை யறியக் கூறிற்றாகலின் அவரு மதற்கீடாக இக்காப்பியத்தை இயற்றியருளினாரென்பதும் இனிது பெறப்பட்டன. படவே இவ்வாசிரியர்க்கிப்பனுவலின்கண் ணுள்ள கிழமை இத்தன்மைத்தென்பதும் நன்று தெளியலாகும்.

அஃதாயிற் பதிகத்துக்கண்ணே அக்கிழமையை முழுதுமுணர்த்தாது பிறிதோரிடத்துக் கூற லென்னையெனின், பாயிரத்து ளுரைக்கற்பாலனவாய பகுதிகளை நூன்முகத்தேயன்றி நூலினிறுதிக்கட் கூறுதலுங் குற்றமாகமாட்டாது; அன்றியும், பதிகத்தின் தோற்றுவாயிலே சுருங்கவுரைத்ததனையே ஆசிரியர் ஆண்டுவிளக்கினாராகலானும் அஃதேற்புடையதேயாகுமென்பது.

(தொடரும்.)

T. N. அப்பனையங்கார்,

இராமேசுவரம் தேவஸ்தான வித்தியாசாலை; மதுரை.

# கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(உக-ஆம் தொகுதியின் ருஅஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

153. "பெண் இவண் உற்ற(து) என்னும் பெருமையால், அருமை யான
வண்ணமும் இலைக ளாலே காட்டாலால், வாட்டம் தீர்ந்தேன்;
தண் நறும் கமலங் காள்! என் தளிர் நிறம் உண்ட கண்ணின்
உள் நிறம் காட்டி, நீர் என் உயிர் தர உலோவி னீரே!".

இ-ள். தாமரைகளே! 'இங்கு வந்தது பெண்' என்றெண்ணு கின்ற (எனவே, இரக்கங்கொள்கின்ற) பெருந்தன்மையினால், (எனது காதலரது) அருமையான (பச்சை) நிறத்தை (உங்களுடைய) இலை களினாலே (காட்டுகின்றீர்கள்; அவ்வாறு) காட்டுதலால் (யான் அவரைக் காணாத) சோர்வு நீங்கினேன்: (எனது செம்மாந்) தளிர் (போலும்) நிறத்தைக் கவர்ந்துகொண்ட (அவருடைய) கண்களில் உள்ள (சிவப்பு) நிறத்தை (உங்களுடைய பூக்களால்) நீங்கள் காட்டி (ச் சிறிது அருள் செய்தீர்கள்; முழுதும் அருள் செய்து) என் உயி(ராவா)ரைத் தருதற்கு உலோபஞ் செய்தீர்கள் (யாது காரணமோ?).

இவண் - இவ்விடம். என்னும் - என்றெண்ணும். "அன்றறிவா மென்னாதறஞ்செய்க" என்ற குறளில் 'என்னாது' என்பது 'என்று கருதாது' எனப் பொருள்படல் காண்க. பெருமை - பெரியாரது தன்மை (குறள் கூஅ-ம் அதி. பெருமை). வண்ணமும் என்பதில் உம்மை இசை நிறை. தண் நறும் கமலங்காள் - குளிர்ச்சியாகிய வாசனையுள்ள தாமரை களே! உண்ட, கவர்ந்துகொண்ட என்றபொருளைக் குறிப்பால் உணர்த் தியது. கண்ணினுண்ணிறம்-கண்ணின் உள் நிறம்—கண்ணில் உள்ள நிறம்; கண்ணுக்குள்ளே உள்ள நிறமெனலுமாம். உலோவுதல் - உலோபஞ்செய்தல்.

'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' என்ற சமயத் திலே தம்மை நோக்கிய இராமபிரானது கண்ணழகிலே ஈடுபட்டுக் காதல்கொண்ட சீதாபிராட்டி, அக்காதலால் தமது தேகம் தன்னிற

மான செம்பொன்னிறம் மாறிப் பைம்பொன்னிறமான பசலை போர்த்ததனால், 'தளிர் நிறம் உண்ட கண்' என்றார். இராமர் தேகநிறத்துக்கு உவமானமான இலைகளைக்கூறிக் கண்ணிறத்துக்கு உவமானமான பூக்களைக் கூறாது உய்த்துணரவைத்தார்.

சாணமற்போன ஒருபொருளின் சில பாகங்களைக் காட்டியவர்பால் அப்பொருள் முழுதும் இருக்குமென்று கருதி, அதனை இழந்தவர், காட்டியவரை நோக்கி, "அதன் சில பாகங்களைக் காட்டினீர்; ஆதலால் அது உம்மிடம் இருக்கின்றது கொடுப்பீராக" என்று வேண்டுதலும், கொடாவிடில், "கொடாமல் உலோபஞ்செய்தீரே" என்று குறைகூறலும் இயல்பன்றோ? அவ்வாறே, சீதாபிராட்டி "தாமரைகளே! என் உயி(ராவா)ரின் மெய்ந்நிறமும் கண்ணிறமும் காட்டினீர். ஆதலால், அவ் உயிர் உம்மிடத்துள்ளது. அதனைக் கொடுத்தல்வேண்டுமென் றிரக்கின்றேன். கொடுக்கின்றிலீர். இவ்வாறு உலோபம் செய்யலாமோ?" என்று நொந்து குறைகூறிப் புலம்பினரென்ற விரிந்த கருத்தை எவ்வளவு சுருங்கிய சொற்களால் எவ்வளவு ஆழம்பட அழகாகக் கவி கூறியிருக்கிறாரென்பதை நோக்குக. மேற்கூறியவாறு பொருள்கூறுதலால், 'கண்ணின் உண்ணிறம் காட்டி நீரென் உயிர்தர உலோவினீரே' என்பதில், கண்ணிறங் காட்டல் வல்லார் உயிர்தரல்வல்லாராதல் எங்ஙனம்? இரண்டுக்கும் பொருத்தம் என்னை? என்று இயல்பாக எழும் சந்தேகம் நிவிர்த்தியாதலும் காண்க.

154. "நாண் உலாவு மேருவோடு நாண் உலாவு பாணியும்,
தூண் உலாவு தோளும் வாளி ஊ(டு)உலாவு தூணியும்,
வாள் நிலாவின் நூல் உலாவு மாலை மார்பும், மீளவும்
காணலாகு மாகின், ஆவி காணலாகு மே கொல் ஆம்!"

இ-ள். (வில்) நாண்பூண்ட மேரு (ஒன்றுண்டாயின் அதனை ஒத்த பெரிய வலிய தநு) வையும் (வில்) நாணையும் (முறையே பிடித்தல் தெறித்தல் செய்து) பொருந்திய (இட வலக்) கைகளையும், தூண்கள் போன்ற (திரண்ட) தோள்களையும், அம்புகள் உள்ளேநிறைந்த அம்பறாத்தூணியையும், ஒளியுடைய நிலா (க்கதிர்ப்புரி) ஒப்ப(முப்புரி)நூல் அசைகின்ற மாலை (அணிந்த) மார்பையும், (நேற்றுக்கண்டதுபோல) திரும்பவும் காணக்கூடுமானால், (என்) உயிரைக் காணக்கூடும்!

முதலாம் உலாவு பூண்டவென்றும் இரண்டாம்உலாவு பொருந்திய வென்றும் மூன்றும் உலாவு போன்றவென்றும் நான்காம் உலாவு நிறைந்தவென்றும் ஐந்தாம் உலாவு அசைநின்றவென்றும் தாம் நிற்கும் இடங்களுக்கியையப் பொருள்படல் கவனிக்கத்தக்கது. பாணி-கை. தூணி-அம்புக்கூடு. வாள்-ஒளி. ஏ, கொல், ஆம் மூன்றும் அசைகள்.

'நாண் (-வில்நாண்) உலாவுமேரு' என்றதனால் மேரு உருவகமாய் வில்லைக் குறித்தது.

155. "விண் தலம் கலந்(து) இலங்கு திங்களோடும், மீது சூழ்
வண்(டு) அலம்(பு) அலங்கல் தங்கு பங்கியோடும், வார் சிலைக்
கொண்டல் ஒன்(று) இரண்டு கண்ணின் மொண்டு கொண்(டு)என் ஆவியை
உண்ட(து)உண்(டு!)என் நெஞ்சின் இன்றும் உண்(டு)அ(து!)என்றும்
[உண்(டு) அரோ!"

இ-ள். ஆகாயத்திலே பிரகாசிக்கின்ற சந்திரனோடும் (தேன் உண்ண) மேலே சுற்றும் வண்டுகள் இரைகின்ற மாலைதரித்த குடுமியோடும் நீண்டவில்லையுடைய மேகம் ஒன்று (வந்து) இரண்டு கண்களால் என் உயிரை மொண்டுகொண்டு உண்டதுண்டு: அது, என் நெஞ்சினுள்ளே இப்போதும் இருக்கின்றது; இனி எக்காலமும் (நிலைபாய்) இருக்கும்.

விண் தலம் கலந்து - ஆகாயமாகிய இடத்தைச் சேர்ந்து. மீது சூழ் (தேன் உண்ண) மேலே சுற்றுகின்ற. அலம்புதல் - ஒலித்தல். அலங்கல் - பூமாலை. பங்கி - குடுமி வார்சிலை - நீண்டவில். கொண்டல் - மேகம். கொண்டல் ஒன்று - ஒரு மேகம். ஆவி - உயிர். உண்டது உண்டு - உண்டது மெய். 'நீ சொன்னதுண்டா?' என்ற உலகவழக்கில், 'உண்டா?' என்பது 'உண்மையா?' என்று பொருள்படல் காண்க. இன்று - இப்போது. (சங்க அகராதி).

திங்கள் முகத்தையும் கொண்டல் இராமரையும் குறித்தன. குடுமி, முகத்துக்குமேலிருத்தலால், 'மீது' என்பதை, அலங்கல்மீது என்று சேர்க்காமல், திங்கள்மீது என்று சேர்த்தும் பொருள்கூறலாம். மேலே குடுமியும் அதன்கீழ்த் திங்களாகியமுகமும் அதன்கீழ் வில்லும் (கன்னிமாடத்தின்மேல்மாளிகையிலிருந்து இராமரைப்பார்த்த சீதாதேவிக்குத்)

தோன்றிய முறை கூறப்பட்டதாகக் கொள்ளலாம். 'ஆவி', 'ஏரி' யென்பவை தடாகத்தைக் குறிக்கும்: ஆதலால், கடலைமொண்டுகொண்டு உண்டு களிக்கும் மேகம் (கடலென்றெண்ணிக் கடல்போன்ற) தடாகத்தை மொண்டு கொண்டு உண்டது என்ற ஒரு தொனிப்பொருள் தோன்றுதல் காண்க.

156. "பஞ்(சு) அரங்கு தீயின் ஆவி பற்ற, நீடு கொற்ற வில்
வெஞ் சரங்கள் நெஞ்(சு) அரங்க, வெய்ய காமன் எய்யவே,
சஞ்சலம் கலந்த போது, தையலாரை, உய்ய வந்(து),
'அஞ்சல் அஞ்சல்' என்கிலாத ஆண்மை என்ன ஆண்மையே?"

இ-ள். கொடிய மன்மதன், (தனது) நீண்ட வெற்றி பொருந்திய வில்லினால், உட்டினமான அம்புகளை, பஞ்சை (எரித்து) அழிக்கும் தீப்போல, உயிரைப்பற்றும்படி, (அவ் உயிர் தங்கிய) நெஞ்சுள் அழுந்த எய்ப, (அதனால்) மாதர்கள் துன்பம் உற்றசமயத்தில், (அவர்கள்) தப்பிப் பிழைக்கும்படி, (அவர்களுக்கு உதவியாகவந்து அம் மன்மதனை ஓட்டிப்) 'பயப்படாதீர்கள்! பயப்படாதீர்கள்!' என்று (அபயவார்த்தை) கூறாத ஆண்மை என்ன ஆண்மை' (பயனற்ற ஆண்மையே யென்றபடி.)

அரங்குதல் - அழிதல்; அழித்தல் என்னும் பொருளுடைய அரக்குதல் என்ற பிறவினைப் பொருள் பயக்கும்படி பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. நட்புக்கோட்படலம் எரு-ம் பாட்டில் 'விலகும்' என்பது 'விலக்கும்' என்ற பொருள்படவருதல் காண்க. தீயின் - தீயைப்போல. அரக்கல், அமுக்கல் (சிந்தாமணி) அழுத்தல் என்ற பொருளுடையதாதலால், அதன் தன்வினையாகிய அரங்கல் அழுந்தல் எனப் பொருள்படுவதாகக் கொண்டு 'நெஞ்சு அரங்க' என்பதற்கு நெஞ்சுள் அழுந்த என்று உரை செய்யப்பட்டது.

இப்பாட்டில் ஒவ்வோரடியும் சிறந்த இன்னோசையுடைமை கவனிக்கத்தக்கது. சீதாதேவி தையலார் என்ற ஜாதிப்பன்மையால் தம்மைக்குறித்தாரென்பது தெளிவாம். தம்மைப் பாதுகாவலராகக் கொண்ட மாதர்கள், பகைவனாகிய மன்மதனால் தாக்கப்பட்டபோது, அவருக்கு உதவியாகவந்து காவாத ஆடவர் ஆண்மை ஆண்மையாமோ?

என்று கூறி, இராமர்வீரத்துக்குக் குறைகூறுவோர்போன்று, அவர், தம்பால், உடனே வாராமையாகிய ஆராமையைச் சீதாதேவி வெளியிட்டார். ஆராமை - (குறை) நிரப்பாமை.

157. "எங்கு நின்(று) எழுந்த(து)இந்த இந்துவந்(து)என் நெஞ்(சு)உலா
அங்(கு) இயன்(று) அனங்கன் எய்த அம்பின் வந்த சிந்தை நோய்
பொங்குகின்ற கொங்கை மேல் விடம் பொழிந்த(து) என்னினும்,
கங்குல் வந்த திங்கள் அன்(று) அகம் களங்கம் இல்லையே."

இ-ள். (இதுவரையில்லாத அதிசயமாக, இன்று பகலில் தோன்றும்) இந்தச் சந்திரன் எங்கே (இதுவரையும் இருந்து (இப்போது இங்கே, உதித்தது! மன்மதன், என் நெஞ்சிலே பவனி வந்து, அங்கே உலாவி, எய்த அம்பினால் உண்டாகிய மனவேதனை (வெப்பம்) கொதித்துக் கிளர்தலையுற்ற கொங்கைகளின்மேல் (அக் கொதிப்புப் போதாதென்று இந்தச் சந்திரன் தன் சூடான நிலவாகிய) விடத்தைச் சொரிந்தது ; ஆயினும், (இந்தச் சந்திரன்) களங்கமில்லாதிருத்தலால், (நேற்று, இரவில் வந்த சந்திர னன்று.

இந்து—சந்திரன்; விரகநோயால் மனம் பேதுற்றிருந்த சீதாதேவி சந்திரனென்று மயங்கிய சூரியனைக் குறித்தது. 'அனங்கன் என் நெஞ்சு உலாவந்து அங்கு இயன்று' எனக் கூட்டி மன்மதன் என் மனத்தில் ஊர்கோலமாக வந்து அங்கே உலாவி யெனப் பொருள் கொள்க. இயலல்—உலாவல் (பத்துப்பாட்டு). பொங்குதல்—கொதித்துக் கிளர்தல். விடம், சீதாதேவி நிலவென்று மயங்கிய வெயிலைக் குறித்தது. கங்குல்-இரவு. திங்கள்—சந்திரன். அகம்—இடம்—(தன்)இடத்தில். இல்லையென்பதன்பின் ஆல் உருபு தொக்கது.

"தாமரைப் பொய்கையிற் பளிங்குமாடத்துச் சந்திரகாந்த மூமிழ்ந்த சீதநீர்தெளித்த புஷ்பசயநத்திற் றுன் கிடந்தமையாலும், சேடியர் செய்யும் சைத்யோபசாரத்தாலும் வெங்கதிர் தண்கதிராய்த் தோன்றலா லிவ்வாறு கூறினர்." ஸ்ரீ இராமசாமி நாயுடு. விரகிகளுக்குச் சைத்தியோபசாரங்களும் திங்கள் தென்றல் முதலிய தண்ணிய இனிய பொருள்களும் வெப்பத்தை அதிகப்படுத்துவனவன்றிக் குறைப்பனவல்லவாம். ஆதலால் இப்பொருள் பொருத்தமாகத் தோன்றவில்லை.

பகல்வர, சூரியனும் வெயிலும் இயல்பாக வெப்பத்தைச் செய்ய, ஸீதாதேவி விரகவேதனையினால் மனக்கலக்கமுற்றுப் பகுத்தறிவு குன்றியிருந்ததனால், அவருக்கு அவைகள் அவரை முந்திய இரவில் இயல்புக்கு மாறாக வெதுப்பிய சந்திரனும் நிலவும்போலத் தோன்ற, சூரியனை "எங்கு நின்று எழுந்தது இந்த இந்து?" என்றும், அவர் கொங்கைகளின்மேற் சூரியன் வெயிலெறித்ததை அப் புதியசந்திரன் (நிலவாகிய வெள்ளை) "விடம் பொழிந்தது" என்றும் கூறிப் பின்பு அதனிடத்துக் களங்கமில்லாமையைக்கண்டு, அது "கங்குல் வந்த திங்களன்று" என்றாரென்பது கருத்தென்று கொள்ளலாம்போலும்.

158. "அடர்ந்து வந்(து) அனங்கன் நெஞ்(சு) அழன்று சிந்தும் அம்(பு)எனும்
விடம் குடைந்த மெய்யினின்று வெந்திடா(து) எழுந்து, வெம்
கடம் துதைந்த காரியானை அன்ன காளை கால் அடைந்(து)
உடன் தொடர்ந்து போன ஆவி வந்தவா என் உள்ளமே."

இ. ள். மன்மதன் மனம் கொதித்து (க் கோபித்து என்னை) நெருங்கிவந்து (என் மேற்) சொரிந்த அம்பாகிய விஷ(நெருப்பு வெள்ள)த்தில் முழுகிய (என்) தேகத்தினின்றும் (அதன் உள்ளே தங்கியிருந்தால் அதனோடு தானும் வெந்துவிடவேண்டிவருமென்று பயந்து) வெந்துவிடாமல் (தப்பிக்கொள்ளும்படி) எழுந்து, அவருடைய காலில் (வீழ்ந்து) சரணடைந்து (அவரைத்) தொடர்ந்து (அவருடன்) போன உயிர் (திரும்பி) வந்த காரணம் யாது? நெஞ்சே! (கூறுவாயாக)

அடர்ந்து-நெருங்கி. அழன்று-கொதித்து-கோபித்து. சிந்தல்-சொரிதல். குடைதல்—நீராடுதல்—முழுகல். வெம்மை—விருப்பு. வெம் கடம்—(வண்டுகளுக்கு) விருப்பமான (யானை)மதம். துதைதல்—செறிதல்—மிகுதல். கார் யானை, காரியானை யெனப் புணர்ச்சிவிலக்கணப்படி புணர்ந்தது. காளை—1. காளைப் பருவமுடையவன்—இளைஞன்; 2. காளைபோலும் (பெருமித) நடையுடையவன். அடைதல் (சரண்) அடைதல். வந்தவா—வந்தவாறு—வந்த ஆறு—வந்தவிதம்—வந்ததற்குக்காரணம்.

விரகதாபமிகுதியால் சகிக்கமுடியாத துன்பமடைந்து, இனிப் பிழையேம் செத்தேவிடுவேமென் றெண்ணி, அறிவிழந்து, அதனால் துன்பத்தை உணராதிருந்த சீதாதேவி, திரும்ப அறிவுதோன்ற, அத

ளுேடு துன்பமும் தோன்றியபோது, உயிரின்றேல் உணர்வின்றென்றும் துன்ப உணர்ச்சி தோன்றியதனுல் உடல்விட்டு நீங்கி யொழிந்ததாக எண்ணிய உயிர் திரும்பிவந்ததென்றும் கருதி, அது திரும்பியதற்குக் காரணம் யாது? இன்னும் துன்பம் உழக்கவோ? என்று தம் நெஞ்சை நோக்கிக் கூறியதனுல், அவர் செத்தோமென் றெண்ணியபடி செத்தொழியாமல் உயிருடனிருப்பதை வெறுத்தாரென்பது கருத்து.

159. "விண்ணுளே எழுந்த மேகம், மார்பின் நூலின் மின்னெ(டு)இம்
மண்ணுளே இழிந்த(து) என்ன, வந்து போன மைந்தனுர்
எண்ணுளே இருந்த போதும் யாவர் என்று தேர்கிலேன்:
கண்ணுளே இருந்த போதும் என் கொல் காண்கி லாதவே!"

இ-ள். விண்ணிலே தோன்றும் மேகம் (மானுடவடிவம் கொண்டு) மின்னற்பூணூலோடு மண்ணிலே இறங்கியதென்று சொல்லும்படி (கன்னிமாடத்தின்முன்னே யான் கண்டு களிக்கும்படி) வந்துபோன (மகா) புருடர் என் மனத்தினுள்ளே இருந்தாலும் (அவரை) யாரென்றறியேன்: (அவர்) என் கண்ணுள்ளேயிருந்தாலும் (அவரை யான் காண்கின்றிலேன். அவ்வாறு) காணுமைக்குக் காரணம் யாதோ?

எழுதல்—தோன்றுதல். 'நூலின மின்னெடு' என்பதை மின்னின் நூலொடு என மாற்றுக. இன்சாரியை. மின்னின் நூல்—மின்னுகிய நூல். மிதிலைக்காட்சிப்படலம் எ0-ம் பாட்டில் 'பாம்பின் மணித்தாம்பு' என்பது பாம்பாகிய மணித்தாம்பு எனப் பொருள்பட வந்தது காண்க. இழிந்தது—இறங்கியது. மைந்தன், புத்திரன் என்ற பொருளைக்குறி பாது புருடன் என்ற பொருளைப் புலப்படுத்தியது, உரிச்சொல்நிகண்டு சுக-ம் பாட்டில் 'மைந்தர்க்கு மாதர்க்கு' எனவரும் சொற்றொடரில் மைந்தர் ஆண்மக்களை யுணர்த்துதல் காண்க. எண்—மனம். இருந்த போதும்—இருந்தாலும்: குறள் எசுரு-ல். 'ஒலித்தக்கால்' என்பது

ஒலித்தபோது, ஒலித்தால் எனப் பொருள்படல் காண்க. உலகவழக்கில் 'வந்தாலும்' என்பது 'வந்தபோதிலும்' என வரல் காண்க. தேர்தல்—அறிதல் (சங்க அகராதி). காண்கிலாதது, 'காண்கிலாத' எனத் து-வ் விகுதி கெட்டுநின்றது. குலமுறைகிளத்துபடலம் ௧அ-ம் பாட்டில் "பூதகணத் தரசேந்தி அனல்நின்றும் புறப்பட்ட." என்ற ஈற்றடியில் புறப்பட்டது எனற்பாலது 'புறப்பட்ட' என வந்தது காண்க. காண்கிலாதது—காண்கிலாததன்மை—காணாமைக்குக் காரணம்.

எட்டாத தூரத்துள்ளகாணற்கரியபொருள், கிட்ட வந்து காட்சியளித்தது என்ற கருத்து விளங்க விண்ணுளே எழுந்தமேகம் மண்ணுளே இழிந்தது' என்றார்.

கருமேகத்தைக் கரிய இராமருக்கு ஒப்பாகக்கூறியதற்குப் பொருத்தமாக, அதன் வெள்ளிய ஒள்ளிய (கொடி) மின்னலை வெள்ளொளிப் பூணூலுக்கு உவமித்த நயம் உள்ளி உவத்தற் குரியது. (உள்ளி—நினைந்து). இவ் இனியகருத்தைச் "சூனிறக் கொண்மூக் கிழித்திடை துடிக்கும் மின்னென மார்பினூல் துளங்க" (நிந்தனைப் படலம் ௫) என்று பின்பும் இனிது கூறுவர். தூரமான இடத்துள்ள பொருள்களையும் காணும் கண் தன்னுள்ளேயே உள்ளவரைக் காணாமையும், இடத்தாலன்றிக் காலத்தாலும் தூரமான பொருள்களை விவரத்துடன் அறியவல்ல மனம் தன்னிடத்திலேயே தங்கியவரை இன்னாரென்று விவரம் தெரிந்துகொள்ளாமையும் ஆச்சரியம் என்பது பின்னிரண்டடிக் கருத்து.

---

(தொடரும்.)

வெ. ப சுப்பிரமணியமுதலியார்.

# மணிமேகலை.

சிலப்பதிகாரத்தில் மணிமேகலை துறவைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதாவது மணிமேகலை தகுந்த பருவமடைந்தது கண்ட நற்றாய் யாதுசெய்வதென மாதவியிடம் கேட்க, அவள் மணிமேகலையைக் கோதைத்தாமம் குழலொடுகளைந்து துறவுபூணச்செய்தாள் என்பதே. கண்ணகி பிரதிஷ்டைக்காலத்து அது காணவந்த தேவந்தி இச்செய்தியைச் சேரனிடம் சொல்லினாளாகையால் அதன் முன்னாலேயே மணிமேகலை துறவெய்தியவளாவள். இதனால் மணிமேகலை முண்டிதக்கோலத்தோ டிருந்தாளெனவறியலாம். பருவமடையுமுன் சித்திராபதியுடனிருந்த மணிமேகலை அதன்பின் மாதவியுடனிருந்தாள். இதற்கு முழுதும் மாறுபட்டசெய்தியே மணிமேகலையிற் காணப்படுவது. அதில் மாதவியுடனேயே மணிமேகலையிருந்ததாகத் தெரியவருகிறது. அவளைத் தன் வீட்டிற்குக்கொண்டுவந்து பொருள்தேடச் சித்திராபதி பலமுறை முயல்கிறாள். இவ்வாறு முயலும் சித்திராபதியுடன் மணிமேகலையிருந்து பருவமடைந்திருந்தால் அவளை மாதவியிடம் அவள் அனுப்பியிருக்கவேமாட்டாள். சிலப்பதிகாரமோ இத்தகைய குணமுடைய சித்திராபதியைப்பற்றிக் கூறவில்லை. அதில் மணிமேகலையைக் 'கணிகையர் கோலங் காணாதொழிக'வென்று மாதவி கூறியபடி அவள் பருவமடைந்தவுடன் அவளை யாதுசெய்வதெனச் சித்திராபதி மாதவியிடம் வினவுகிறாள். உடனே மணிமேகலையின் கோதைத்தாமம் குழலொடுகளைந்து போதித்தானம்புரிந் தறம்படுத்துகிறாள் மாதவி. இதனால் சித்திராபதி மாதவியின் தாய்போல் நடந்தமை புலனாகிறது.

மணிமேகலையிலோ சித்திராபதிகுணமும் மாதவிகுணமும் முழுதும் மாறுபடுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழா நடைபெற்றது. அவ்விழாக்காலத்திற் பண்டைவழக்கப்படியே ஆடுதற் பொருட்டு. மணிமேகலையும் மாதவியும் வாராமையால் மனம்புழுங்கிய சித்திராபதி வயந்தமாலையை யழைத்து நீ மாதவிபாற்சென்று விழா

விற்கு வாராதிருத்தல்பற்றி இவ்வூரார்கூறும் பழிமொழியை அவளுக்குச் சொல்லிவா என்றனுப்பினுள். ஊரார் பழிமொழியை யாதெனக் கவனிப்போம்.

வயந்தமாலை மாதவியிடம்சென்று,

"உன்னோடிவ்வூருற்றதொன்றுண்டுகொல்
வேத்தியல்பொதுவியலென்றிருதிறத்துக்
கூத்தும்பாட்டுந்தூக்குந்துணிவும்"
"நாடகமகளிர்க்குநன்கனம்வகுத்த
ஓவியச்செந்நூலுரைநூற்கிடக்கையுங்
கற்றுத்துறைபோகியபொற்றொடிநங்கை
நற்றவம்புரிந்தது நாணுடைத்தென்றே
அலகின்மூதூரான்றவரல்லது
பலர்தொகுபுரைக்கும்பண்பில்வாய்மொழி
நயம்பாடில்லைநாணுடைத்தென"றாள்.

(மணி II 17-19. 30-36.)

இதனல் நாடகக்கணிகையர்க்குரிய நடனமெல்லாம் கற்றுத்துறைபோகிய மாதவி அரங்கேறி நடித்து நம்மை மகிழ்வியாமல் இவ்வாறு தன் குலத்திற் கிழுக்காம் தவம்பூண்டாளென் றறியவிருப்பதால் மாதவி நடனத்திற்கு வாராமைபற்றியதே பயங்கெழுமாநக ரலரென வறியலாம். உன்னோடு இவ்வூருற்றதொன்றுண்டுகொல் என்றதனலே மாதவிமட்டுமே தவவொழுக்கம்பூண்டவளாகக் காணப்படுகின்றாள். மணிமேகலை தவவொழுக்கம்பூண்டவளாகக் காணப்படவில்லை. ஏனெனில் ஏச்சுரை அவளைப்பற்றியில்லை. ஆனல் தவவொழுக்கம்பூணுவதற்காக அவள் தவவொழுக்கம்பூண்ட தன் தாயுடனேயே வசிக்கிறாள்.

மணிமேகலை அப்பொழுதுதான் பருவமடைந்ததாகத் தெரியவருகிறது. ஏனென்றால், சித்திராபதி அவளைத் தன்வசப்படுத்திப் பொருள் தேட வெண்ணுகிறாள். அதனுடன் துறவுபூண்ட தன்மகள் மாதவியையுங் கூடத் தன்வழிப்படுத்த முயல்கிறாள். பதினெட்டாவது பாட்டில் மணிமேகலை அம்பலமடைந்தமைகேட்ட சித்திராபதி,

"மாதவி மாதவர் பள்ளியு ளடைந்தது
நகுதக் கன்றே நன்னெடும் பேரூ
ரிதுதக் கென்போர்க் கெள்ளுரை யாயது". (18.10)

என்றதனால் மாதவிமட்டுமே தவவேடம்பூண்டிருந்தமை வலியுறுகிறது. மேலும், சித்திராபதி,

"மாதவி யீன்ற மணிமேகலை வல்லி
போதவிழ் செவ்வி பொருந்துதல் விரும்பிய
உதைய குமரனு முலகாள் வண்டின்
சிதையா வுள்ளஞ் செவ்விதி னருந்தக்—கைக்கொண்டு"
(25—29).

என்றதனாலே அவள் எவ்வாறுவது பொருள்தேட வாசையுடையவளாயிருந்தாளென்பது தெளிவாகும். அவள் மணிமேகலையை யெப்படியாவது உதயகுமரன், தேரிலேற்றிவருவேனென்று சபதம்செய்து அவனிடஞ்சென்று,

"நாடகம் விரும்ப நன்னலங் கவினிக்
காமர் செவ்விக் கடிமல ரவிழ்ந்த
துதைய குமரனெனு மொருவண் டணீஇய
—விரைவொடு வந்தேன்" (58—61).

என்று கூறியதால் மணிமேகலை அப்பொழுதுதான் பக்குவமடைந்தவளென்றும், அதனால் அவளின்பநுகர உதயகுமரனைத் தூண்டினளென்றும் அறியலாம். சித்திராபதி மணிமேகலையை நடிக்கச்செய்து ஆடவர்களை இழுத்து அவளின்பநுகர்வித்துப் பொருள்தேடவே அவளை அவள் தாயுடன் அழைத்தாளென்பது, அவளே உதயகுமரனிடம்,

"ஆடவர் காண நல்லரங் கேறி
ஆடலும் பாடலும் அழகுங் காட்டிச்
சுருப்புநாண் கருப்புவில் அருப்புக்கணை தூவச்
செருக்கய னெடுங்கட் சுருக்குவலைப் படுத்துக்
கண்டோர் நெஞ்சம் கொண்டகம் புக்குப்
பண்டேர் மொழியில் பயன்பல வாங்கி
வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிரை"-103-109).

என உரைத்தலால் விளங்கும். இதனால் மணிமேகலையும் மாதவியும் ஆடவாததனாலேயே வருந்தி வயந்தமாலையைத் தூதுபோக்கினவளாவளென்றும், மாதவி ஆடவாமைகருதியே ஊரார ரேசினரென்றும் நன்கு தெளியலாம். ஆகையால் இவ்வேச்சுரை கோவலனிறந்த மறு சித்திரையிலாக இருக்கவேண்டும்.

சித்திராபதியோ உதயகுமரனிடம் மணிமேகலையைச் சேர்க்க மிக முயன்றாள். உதயகுமரன் தன்னிடம் ஆசைகொண்டிருந்தமை மணிமேகலையு மறிவாள். இது சுதமதியுடன் பூஞ்சோலைசென்றவிடத்து உதயகுமரன் வருகிறானென்றறிந்த அவள்,

"சித்திரா பதியோ டுதய குமரனுற்
றென்மேல் வைத்த உள்ளத் தானென
வயந்த மாலை மாதவிக் கொருநாட்
கிளந்த மாற்றங் கேட்டே னாதலின்" (மணி. IV. 79-82.)

எனக் கூறுவதா லறிப்படும். அப்பொழுது அவளைப் பெறமுடியாது அவன் சித்திராபதியால் அவளை யடைவேனென்று போகிறான். இவ்வாறு முன்னும் முயன்ற உதயகுமரனையே சித்திராபதி பின்னரும் தூண்டி அவளைத் தன்தேரிலேற்றிவரச் சொல்லுகிறாள். அவன் அவள் சூழ்ச்சியாற் சென்று மடிகிறான். சித்திராபதி தன்சூழ்ச்சியிற்போயவன் மடிந்தமையும் அதனால் மணிமேகலை சிறைப்பட்டுப் பின் இராசமாதேவியிட முள்ளாளென்பதையு முணர்ந்து பொருளாசையால் அவளை மீட்டும் தன்வீட்டிற் கிட்டுவரவெண்ணி இராசமாதேவியிடம் செல்கிறாள். சென்றவள் "நன்மனம் பிறந்த நாடகக் கணிகையை என்மனைத் தருக" என வேண்டுகிறாள். அரசன்மனைவியோ தவவொழுக்கத்திற் கருத்துடைய மணிமேகலை உன் எண்ணப்படி உன் வீடு வாரா ளென்கிறாள்.

இதுகாறு மாராய்ந்தவற்றால், சித்திராபதி பணப்பேய் பிடித்தவளென்றும், அதனால் துறவுபூண்ட மாதவியையும் அவளுடன் வசித்திருந்து அப்பொழுதுதான் பருவமடைந்திருந்த மணிமேகலையையும் தன்வழிப்படுத்திப் பொருள்தேட முயன்றாளென்று மறியலாம். இத்தன்மையள் மணிமேகலைகூறும் சித்திராபதி. ஆனால், சிலப்பதிகாரங் கூறும் சித்திராபதியோ இத்தன்மையளல்லள். அவள் தன்னுடன் வசித்திருந்த மணிமேகலை பருவமடைந்தமைகண்டு மாதவர்பள்ளியடைந்து அங்கிருந்த முண்டிதக்கோலத்தளான மாதவியிடம் "உன் மகள் பருவமடைந்தாள்" "தலைக்கோ லாசான் பின்னுள னாகக், குலத்தலை மாக்கள் கொள்கையிற் கொள்ளார், யாது நின்கருத் தென்செய்கோவென" (சிலப். XXX 20-22) உரைக்கிறாள். இதனால் மணிமேகலை

கூறும் சித்திராபதியும் சிலப்பதிகாரங்கூறும் சித்திராபதியும் குணத்தாலும் செயலாலும் மாறுபடுகின்றமை காண்க.

இனி மணிமேகலைசெய்தியை யாராய்வோம். மேற்கூறியவாறு சித்திராபதி சொல்லக்கேட்ட மாதவி, தன் மகளை,

"வருகவென் மடமகள் மணிமே கலையென்
றுருவி லாளன் ஒருபெருஞ் சிலையொடு
விரைமலர் வாளி வெறுநிலத் தெறியக்
கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்"

(சிலப். XXX 24—28)

கண்ணகி பிரதிஷ்டைக்குமுன் இவ்வாறு மணிமேகலை கூறவில்லை.

"மாபெரும் பத்தினி மகண் மணிமேகலை, அருந்தவப் படுத்த லல்லதி யாவதும், திருந்தாச்செய்கைத் தீத்தொழிற் படாள்" (மணி. II. 55-57) என்றும், "அணியமைதோற்றத் தருந்தவப் படுத்திய—தாயோ கொடியள்" (III. 149-150) என்றும், "ஊழ்தரு தவத்தள் சாப சரத்தி" V 16) என்றும், "தவத்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த" VII—13) என்றும் காணப்படுமடிகளால் அவள் சாதாரணமாக அவளம்மையுடனிருந்து பரத்தைமைத் தொழில்விடுத்துத் தவவழிப் பழகினவளாவள் என்பது அறிய இருக்கின்றது. ஏனென்றால் அவள் கச்சிக்குப் போனபிறகே "தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப், பவத்திற மறுகெனப்........நோற்றனள்" (XXX. 263-264)

மேலும் மணிமேகலாதெய்வம் "சுதமதி தன்னைத் துயிலிடை நீக்கி.... மணிமே கலைபா, ஒதிசான் முனிவ னறவழிப்படூஉ, மேதுமுதிர்ந்த திளங்கொடிக் காதலின்" என்றும், "ஏதமில் நெறிமக ளெய்திய வண்ணமு, முரைசாய் நீயவள் என்றிற முணரும்" என்று முரைத்ததை நோக்கின், மணிபல்லவம் போனபொழுதுதான் மணிமேகலை ஆதிசான்முனிவ னறவழிப்படும் வதுமுதிர்ந்து அவ்வேதமில்நெறியெய்தியவளாவளென் றறியலாம். ஆனால் அவள் சிலப்பதிகாரம் கூறும்வண்ணம் கூந்தல் களைந்து தவவழிப்பட்டிலள். ஏனெனில், பலவிடத்தும் 'மதுமலர்க்குழலியொடு' (III 16) என்றும், 'மதுமலர்க் குழலாள் மணிமே கலைதான்' (V 92) என்றும், 'மைம்மலர்க்குழலி'

யென்றும், (XII 5), "நறுமலர்க் கோதாய்" (XII 56) என்றும், 'தோட் டலர்க் குழலியை' (XX 13) என்றும், 'மதுமலர்க் குழலி' (XXI 4) 'தோட்டலர்க் குழலி' (XXI 10) யென்றும், 'நறைமலர்க் கூந்தல் நங்கை நீயும்' (XXVI. 62) என்றும் மணிமேகலை கூறப் படுதலினாலே வஞ்சிபோய்க் கண்ணகியைத் தரிசித்துக் கச்சிபுகும்வரை குழலுடனேயே இருந்தவளாவள். ஏதோ இவள் சிறப்பித்தழைக்கப் படுகிறாள், உண்மையில் இவளுக்குக் கூந்தல் இல்லையென்றால் அது பிழை. என்னை? மணிமேகலாதெய்வம் அவளை மணிபல்லவத்து விட்டபொழுது விழித்தெழுந்த அவள் தந்தையைநினைத்துக் "குரற் றலைக் கூந்தல் குலைந்துபின் வீழ, அரற்றினள் கூவி யழுதன ளேங்கி" (VIII. 36—37) என்றதனால் அவள் மதுமலர்க் குழலியாகவே யிருந் தனள். கச்சியில் அறங்கேட்டிருந்தபொழுதுகூட அவள் கூந்தல்களைந் தமை கேட்கப்படவில்லை. இதனாற் சிலப்பதிகாரங்கூறும் மணிமேகலை வேறு, மணிமேகலை நூல்கூறும் மணிமேகலைவேறு என்றறியலாம். சிலப் பதிகாரம் கண்ணகிபிரதிஷ்டைக் குமுன்னரே மணிமேகலை குழல்களைந்து புகாரிற் றவவழிப்பட்டாளென்கின்றது. மணிமேகலைநூலோ கச்சிபுக் குக் கண்ணகிபிரதிஷ்டைக்கு வெகுநாள் கழித்துத் தவவழிப்பட்டா ளென்னும்.

மணிமேகலையை நடனத்துக்கழைத்தது போலவே மாதவியையும் சித்திராபதி நடனத்துக்கழைத்தாளாகையாலும் ஊரார் மாதவி ஆடவாராமைபற்றி ஏசினராகையாலும், மணிமேகலை துறவுபூண்டும் கூந்தல் களையாதிருந்தமைகாணப்படுதலினாலும் மாதவியும் கூந்தல் களை யாமலே இருந்தவளாவள். மேலும் அவள் கூந்தலிலாதிருந்தமை மணிமேகலையிற் கேட்கப்படவில்லை. இதனால், சிலப்பதிகாரமும் மணி மேகலையும் கொள்கையானும் மாறுபடுகின்றன.

மேற்குறித்த ஆராய்ச்சியால் மணிமேகலைநூலிற் காணப்படும் செய்திகள் சிலப்பதிகாரத்திற்கு முற்றும் மாறுபடுகின்றமை தெளிவா கிறது.

மணிமேகலைகூறும் காவிரிப்பூம்பட்டினவிழா முதலிய செய்திகள் கண்ணகிபிரதிஷ்டைக்குச் சிலவாண்டுகளுக்குமுன் அதாவது கோவலன் மாண்ட மறுசித்திரையிலேயே நடந்தனபோலக் காணப்படினும்

அதற்கு மருசித்திரையிற் புகாரழிந்தபின் கண்ணகியை மணிமேகலை வணங்குகிருளாகையால் அதற்குள் கண்ணகிபிரதிஷ்டை நடந்து சில வாண்டுகளாயினபோலவும் செய்திகள் உள்ளன. இவ்வாறு சிலப்பதிகாரத்துக்கு முழுதும் மாறுபட்டுள்ளமையால் இளங்கோவடிகளுக்குச் சேரவலன் சரிதமுரைத்த சாத்தனுரால் மணிமேகலை யெழுதப்படவில்லை. அவர் மணிமேகலையை இளங்கோவடிகள் கேட்டார் என்பது பிழை. அவர் தமக்குப் பெருமைகருதி அவ்வாறெழுதியவராவர். இளங்கோவடிகள் சாத்தனுர் முன்னிலையிற் சிலப்பதிகாரத்தை யரங்கேற்றினுரென்பதையறிந்த மணிமேகலையாசிரியர் இளங்கோவடிகள் முன்னிலையில் மணிமேகலை அரங்கேற்றப்பட்டதெனப் பிழைகூறினுர். இளங்கோவடிகள் மணிமேகலைதுறவைப் பாடவெண்ணிச் சாத்தனுரிடம் சொல்ல அவர் முன்னரே அதைப் பாடிமுடித்துவிட்டதாகக் கூறுகிருரென்று அடியார்க்கு நல்லார் கூறுதற்கு இரண்டு நூலிலும் ஆதாரமில்லை. ஆகையால் ஆசிரியர் திருவள்ளுவர்பெயரா னெழுந்த ஞானவெட்டிபோன்றது சாத்தனுர்பெயரானெழுந்த மணிமேகலை. ஞானவெட்டியைத் திருவள்ளுவர்பாடினுரென வழங்குவதுபோலவே மணிமேகலையையும் சாத்தனுர்பாடினுரென்றுகூறி அதனுடன் அவர் பாடியமைபற்றி ஒருகதையும் கட்டிவழங்குவாராயினர். அதைக்கேட்டறிந்த அடியார்க்கு நல்லார் அதையெழுதியவராவர்.

•

சிலப்பதிகாரத்துக்குமுந்தியநூல் மணிமேகலையாயிருப்பின் அதிற்காணப்படும் உதயகுமரன்சாவும் புகாரழிவும் சிலப்பதிகாரத்திற் காணப்படாமை வியப்பே. சோழபாண்டியவிலங்காவரசர் செயல்களை யெல்லாம்கூறும் சிலப்பதிகாரம் இவை உண்மையில் அதன்முன் நடந்திருக்குமேல் இவற்றைக் கூருதிராது. மேலும் மணிமேகலை சிலப்பதிகாரத்திற்குமுந்தியநூலென்ருல் அதில், கண்ணகியை மணிமேகலை வணங்கினுளென்ற செய்தி காணப்படுவதால் அச்செய்தி கண்ணகியை

வணங்கினவரையெல்லாம்கூறும் சிலப்பதிகாரத்திலும் காணப்படல் வேண்டும். அவ்வாறு சிலப்பதிகாரம் கூறவுமில்லை. ஆகையால் மணிமேகலை சிலப்பதிகாரத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பிந்திய நூலென்பது அங்கையின் நெல்லிக்கனியாகிறது.

"சிலப்பதிகாரத்தைப்போலல்லாமல் மணிமேகலையில், பல வடசொற்கள் விரவியுள்ளன, அதன் நடையும் மிக மாறிப்பட்டுள்ளது. சிலப்பதிகாரக்காலத்து வடமொழி தமிழோடு விரவவில்லை. மணிமேகலையின் காலத்தோ வடமொழி தமிழோடு மிகுதியும் விரவிவிட்டது. சிலப்பதிகார காலத்து மதப்போர் இல்லை, மணிமேகலையின் காலத்தோ மதப்போர் காணப்படுகிறது, அதன் ஆசிரியராகிய சாத்தனுரென்பவரோ மதப்போரில் ஈடுபட்ட பௌத்தராகக் காணப்படுகிறார். அவர் தம் காலத்துப் பௌத்தமதம் குன்றுவதுகண்டு இந்நூன்முகத்தால் அதைத் தாங்கலாமென எண்ணி இதை யெழுதியவராவர்.

இதுகாறு மாராய்ந்தவற்றால், சிலப்பதிகாரத்துக் காணப்படும் சாத்தனாரால் மணிமேகலை யெழுதப்பெறவில்லையென்பதும் சிலப்பதிகாரத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்ட நூலே மணிமேகலை யென்பதும் இனிது புலனாகின்றது.

இ. மு. சுப்பிரமணியபிள்ளை.

---

### சிவபிரான் அணிந்த கொன்றை வண்டு.

60. சூழ்ந்து முரன்றணவி வாசந் துதைந்தாடித்
தாழ்ந்து மதுநுகர்ந்து தாதருந்தும்—¹வீழ்ந்தபெரும்
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு.

### சிவபிரான் முடிப்பிறை.

61. இன்றுமையாண் மாசிலா வாண்முகங்கண் டேக்கற்றோ
அன்றி விடவரவை யஞ்சியோ—கொன்றை
உளராவா றோடு மொளிர்சடையீர் சென்னி
வளராவா றென்னோ மதி.

### சிவபிரானணியு மரவு.

62. காமருவு பொற்றொடியாங் காலிற் கழலாம்
பொருவில் புயவலய மாகும்—அரவரைமேல்
நாணு மாற்கு நகைமணிசேர் தாழ்குழையாம்
பூணும் புனைமாலை யாம்.

### சிவபிரான் கூத்து.

63. பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே.

64. வரிகொ ளரவு மதியுஞ் சுழலக்
கரிகா லேந்தி யாடுமே
கரிகா லேந்தி யாடு மிறைவன்
புரிபுன் சடைமேற் புனலும் பிறழவே.

### சிவபிரான் செயல்கள்; (நிரனிறை)

65. கூற்றுவனை வின்மதனை யரக்கர் கோவைக்
கூனிலவைக் குஞ்சரத்தை யிஞ்சி மூன்றை
ஏற்றுலகின் புறவுருவ மாளத் தோள்க
ளிறவெறிப்ப விமயப்பெண் வெருவ வேவக்
காற்றொழிலா னயனத்தால் விரலாற் கற்றைக்
கதிர்முடியாற் காதலத்தாற் கணையாற் பின்னும்
ஊற்றழிய வுதைத்தெரித்து நெரித்துச் சூடி
யுரித்தெரித்தா னவனெம்மை யுடைய கோவே.

---

(60) தண்டி. 28 உரை; ¹வீழ்ந்தெழுந்த. (61) ஷை. 21. உரை. (62) ஷை. 39 உரை. (63) தொல். செய். 149 பேரா. நச்; யாப். வி. 87; வீரசோ. யாப். 17 உரை. (64) யாப். வி. 76. (65) காளமேகப்புலவர்வாக்கென்பர்.

66. கண்ணவனை யல்லது காணா செவியவன
தெண்ணருஞ்சீ ரல்ல திசைகேளா—அண்ணல்
கழலடி யல்லது கைதொழா வஃதால்
அழலங்கை கொண்டான்மாட் டன்பு.

### திரிபுரதகனம்.

67. பண்டு புரமெரித்த தீமேற் படர்ந்தின்றும்
அண்ட முகடு நெருப்பறா—தொண்டளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த வடமேரு
வில்லி நுதன்மேல் விழி.

### தில்லைச் சிவபிரான்.

68. காலையு மாலையுங் கைகூப்பிக் கைதொழுதான்
மேலை வினையெல்லாங் கீழவாம்—கோலக்
கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து.

69. தேங்கானன் முத்தலைக்குந் தில்லைப் பெருந்சகைக்
கோங்காரத் துட்பொருளா மொண்சுடர்க்கு—நீங்கா
மருளா மருளா தரித்துரைக்கு மாற்றம்
பொருளாம் புனைமாலை யாம்.

70. வாய்த்த பொருள்விளைத்த தொன்றில்லை மாதவமே
[1]யார்த்த வறிவில்லை யம்பலத்துக்—கூத்துடையான்
சீலஞ் சிறிதேயுஞ் சிந்தியேன் சென்றொழிந்தேன்
காலம் வறிதே கழித்து.

71. உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த்துரையுந்
தள்ளவிழி நீரரும்பத் தான்மறந்தாள்—புள்ளலைக்குந்
தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய்
பூந்தா மலரதொழுத பொன்.

### கச்சித் திருவேகம்பம்.

72. பூமகள்யார் போவானை யேவுவா னென்னுரைக்கும்
நாமம் பொருசரந்திற் கென்னென்பார்—தாமழகின்
பேரென் பிறைசூடும் பெம்மா னுவந்துறையும்
சேர்வென் திருவேகம் பம்.

---

(66) பி. வி. 11 உரை; இது, சேரமான்பெருமாணுயனுர் இயற்றியருளிய திருக்கைலாயஞானவுலாவிற் பயின்றுள்ளமை காண்க. (67) தண்டி. 54 உரை. (68) வீரசோ. அலங். 31 உரை; தண்டி. 80 உரை. (69) தண்டி. 93 உரை. (70) ஷை. 44 உரை; [1]ஆர்த்த. (71) ஷை. 28 உரை. (72) ஷை. 95 உரை;

73. நலத்தகை பெறவிரு சரண மோதுநங்
குலத்தகை பணிகொளே காம்ப ரத்தனே
நலத்தகை மகளொரு பாக நண்ணுமேந்
குலத்தகை பணிகொளே காம்ப ரத்தனே.

(காளமேகப்புலவர் பாட்டு.)

74. முக்காலுக் கேகாமுன் மூன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது.

கச்சாலைச் சிவபிரான்.

75. நீல மணிமிடற்ற னீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்ப னுதல்விழியன்—தோலுடையன்
கைம்மான் மறியன் கனன்மழுவன் கச்சாலை
யெம்மா னிமையோர்க் கிறை.

76. சீலத்தான் ஞானத்தாற் றேற்றத்தாற் சென்றகன்ற
காலத்தா லாராத காதலான்—ஞாலத்தார்
இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினிதாங்
கச்சிக்கச் சாலைக் கனி.

திருநெறிக்காரைக்காட்டுச் சிவபிரான்.

77. வெறிவிரவு புன்சடைமேல் வெள்ளம் பரக்கும்
விறல்விசய னுகத்தும் வெள்ளம் பரக்கும்
கறைவிரவு நஞ்சுண்டு கண்டங் கறுக்கும்
கழலடைந்தார் தீவினையைக் கண்டங் கறுக்கும்
பொறிவிரவு பூண்முலையாள் போகத்த னாகும்
பொதுநீக்கித் தனையடைந்தார் போகத்த னாகும்
நெறிவிரவு கீஞ்சி நெறிக்காரைக் காட்டான்
நிழலடைந்தார் தம்மை நெறிக்காரைக் காட்டான்.

திருச்சிராப்பள்ளிச் சிவபிரான்.

78. பணிமின்கள் பாதம் பகர்மின்க ளுமங்கள் பாரகத்தீர்
தணிமின்கள் சீற்றந் தவிர்மின்கள் பொய்ம்மை தவம்புகுநாள்
கணிமின்க ளேன்ற கிளிகடி மாதர்தங் கைவிசைத்த
மணியின்கள் போலொளிர் வான்றோய் சிராப்பள்ளி வள்ளலுக்கே.

(73) தண்டி. 94 உரை. (75) தண்டி. 28 உரை. (76) ஷை 95 உரை. (77) யாப். வி. 77. (78) திருச்சிராப்பள்ளிக் குன்றின் குடைவரையிற் பொறிக்கப்பட்ட சாஸனப்பாடல்களுள் ஒன்று (செந். 4. 400).

இறையனார் பொய்யாமொழிப்புலவர்முன்பு சிராமலையைப் பாடிய வெண்பா.

79. கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பணைக்கை [1]புகமடுத்துக்—காட்டானை
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை.

(பொய்யாமொழியார் பாட்டு.)

80. அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பணை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட் டியானையைத் தேடி விதம்விதமாய்ச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே.

திருநெய்த்தானத்துச் சிவபிரானை ஒட்டக்கூத்தர் பாடியது.

81. விக்கா வுக்கா வித்தா விப்போய்
விட்டா னட்டார் சுட்டேர் புக்கார்
இக்கா யத்தா சைப்பா டுற்றே
யிற்றே டிப்போய் வைப்பீர் நிற்பீர்
அக்கா டப்பேய் தொக்கா டச்சு
ழப்பா டத்தீ வெப்பா டப்பூ
ணெக்கா டக்கா னத்தா டப்போம்
நெய்த்தா னத்தா னைச்சே வித்தே.

ஷை புகழேந்திப்புலவர் பாடியது.

82. தற்கோ லிப்பூ சற்பா சத்தே
தப்பா மற்சா கைக்கே நிற்பீர்
முற்கோ லிக்கோ [2]லிப்பூ சித்தே
முட்டா [3]மற்சே வித்தே நிற்பீர்
வற்று நெட்டோ [4]டைப்பா ரச்சேன்
மைப்பூ கத்தே றித்தா விப்போய்
நெற்று ளுற்று லைப்பா கிற்சேர்
நெய்த்தா னத்தா னைச்சே வித்தே.

---

(79) தமிழ்நா–4: [1]புகமடுக்குங். (80) ஷை 71. தொண்டை. சத. (81, 82) தொண்டை. சத [2]லிப்பா வித்தே. [3]மற்பூ சித்தே [4]டைப்பா ரைச்சேன்.

### திருவெண்காட்டுச் சிவபிரான். (முதற்சவலை.)

83. சங்குமுள பறையுமுள தானல்ல கவரியுள
எங்குமுள துரவுகிண றெறியுமறி கொடியுமுள?
பொங்குபுனல் வந்தலைப்பப் புள்ளினங்க ளார்ப்பப்
பொருகயலோ டினவாளை புறக்கணித்து நோக்கத்
தெங்குபழம் வீழ்ந்தொழுகுங் காவிரியின்றென்பாற்
றிருவெண்காட் டையவெனிற் றீவினைகள் போமே.

### தேவூர்ச்சிவபிரான்.

84. அரிசி விளைத்தன் றமுதளிக்குந் தேவைப்
புரிசிறக்கு மீசரிரு பொற்றாள்—தரிசித்தோர்
வேண்டும் வரமனைத்தும் மேவுவார் பார்மீதில்
மீண்டுபிற வார்பெறுவார் வீடு.

### திருவாமாத்தூர்ச் சிவபிரான்.
### (இரட்டையர் ஆறுவிலகப் பாடியது.)

85. ஆற்குழை யோவர வோவாயர் பாடி யருமனையோ
பார்க்கட லோதம்ப மோதங்கு மாவம் பலபலவா
மாற்கழு மாகிநின் றூர்மாதை நாதர் வலங்கொள்பம்பை
மேற்கரை கோயில்கொண் டார்புரஞ் சிறிய வெங்கணைக்கே.

### சிவதலத்தொகை.

86. ஈணாட் டிரண்டு மலைநாட்டி லொன்றுகொங் கேழுவையை
வாணாட்டி ரேழ்நடு நாட்டெழு மூன்றொன்றைந் தாம்வடக்கிற்
சோணாட் டொருநூற்றுத் தொண்ணூறென் றோர்வர் துளுவத்தொன்று
நாணாட் டியதொண்டை நன்னாட்டி லாறைந் திருநகரே.

### பாண்டிநாட்டுச் சிவதலத்தொகை.

87. கூடல் புனவாயில் குற்றால மாப்பனூர்
ஏடகநெல் வேலி யிராமேச—மாடானை
தென்பரங்குன் றஞ்சுழிய றென்றிருப்புத் தூர்கானை
வன்கொடுங்குன் றம்பூ வணம்.

### அட்டவீரட்டம்.

88. பூமன் றிருக்கண்டி யந்தகன் கோவல் புரமதிகை
மாமன் பறியல் சயந்தரன் விற்குடி மாவழுவூர்

---

(83) வீரசோ. யாப். 24. (84) சோழமண். சத. 53. (85) தமிழ் நா. 111: (86) தொண்டைமண். சத. 2. (87) காளமேகம்வாக்கென்பர்.

காமன் வெறுக்கை நமன்கட வூரிந்தக் காசினிக்குள்
தேமன்னு கொன்றைச் சடையான் பொருதிட்ட சேவகமே.

### சத்தவிடங்கத்தலம்.

89. சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயல்—பேரான
ஒத்ததிரு வாய்மூ ருவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்.

---

## விநாயகர்.

90. தன்றே ணன்கி னென்றுகைம் மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே.

91. எண்ணிய வெண்ணியாங் கெய்துப கண்ணுதற்
பவள மால்வரை பயந்த
கவள யானையின் கழல்பணி வோரே.

92. மதிபாய் சடைமுடித்து மாசுணப்பைம் பூட்டுச்
சதிபாய் குறுந்தாட்டுத் தான—நதிபாய்
இருகவுட்டு முக்கட்டு நால்வாய்த்தெ னுள்ளம்
உருகவிட்டு நின்ற வொளி.

93. மானமருங் கண்ணாண் மணிவயிற்றில் வந்துதித்தான்
தானவரை யென்றுந் தலையழித்தான்—ஆனைமுகன்
ஒட்டினான் வெங்கலியை யுள்ளத் தினிதமர்ந்து
வீட்டினா னம்மேல் வினை.

94. தேனக் கலர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே
கூனற் பவளக் கொடியாகத்—தானம்
மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்
புழையார் தடக்கைப் பொருப்பு.

---

(90) தொல். செய். 52 இளம்பூ: (இது முத்தொள்ளாயிரக்காப்பென்று புறத்திரட்டால் அறியப்படுகின்றது). (91, 92.) தொல்காப்பியம், தமிழ்நாவலர் சரிதை, உரிச்சொனிகண்டு முதலிய நூல்களின் தொடக்கத்துக் காணப்படுகின்றன. (93) தண்டி. 39 உரை. (94) வீரசோ. அலங். 19 உரை. தண்டி. 35 உரை.

(விநாயகர்க்கும் மலைக்குஞ் சிலேடை.)

95. அம்பொற் பணைமுகத்துத் திண்கோட் டணிநாகம்
வம்புற்ற வேோடை மலர்ந்திலங்க—உம்பர்
நவம்புரியும் வானதியு நாண்மதியு நண்ணத்
தவம்புரிவார்க் கின்பந் தரும்.

96. திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

97. தடந்தாட் கொத்த தமனியச் சிலம்பு
படந்தாழ் கச்சைப் பாம்பொடு [1]மிளிர
[2]வென்றாடு திருத்தாதை வியந்துகைத் துடிகொட்ட
நின்றாடு மழகளிற்றை [3]நினைவாரோ வினையிலரே.

---

## முருகக்கடவுள்.

98. நீல நெடுங்கொண்மூ நெற்றி நிழனூறிக்
காலை யிருள்சீக்குங் காய்கதிர்போற்—[4]கோல
மணித்தோகை மேற்றோன்றி மாக்கடற்சூர் வென்றோன்
அணிச்சே வடியெம் மரண்.

99. முருகவேள் சூர்மா முதறடிந்தான் வள்ளி
புரிகுழன்மேன் மாலை புனைந்தான்—சரணளித்து
மேலாய வானோர் வியன்சேனை தாங்கினான்
வேலா னிடைகிழித்தான் வெற்பு.

(அம்போதரங்கவொருபோது).

100. செஞ்சுடர் வடமேரு விருமருங்குந் திரிகின்ற
வெஞ்சுடரு மதியமும்போல் வேலொடுகே டகஞ்சுழல
மாயிரு மணிப்பீலி மணியெருத்திற் றோன்றுங்கால்
சேயொளி கடற்பிறந்த செந்தீயிற் சிறந்தெறிப்ப
மறுவருந்தம் மனத்துவகைக் [5]கலுழ்ச்சியான் வளர்த்தெடுத்த
அறுவருந்த [6]முலைசுரந் தகடருந்தா றமுதூட்ட

---

(95) தண்டி. 75 உரை. (96) மியூ. காட். 2. பக். 545, (1916). (97) தொல்; செய், 149 பேரா; நச்: [1]தழீஇ. [2]வென்றாதி நந்தாதை. [3]நினைவாரே. (98) இரும்பல்காஞ்சி (புறத்திரட்டு மேற்கோள்); [4]சோலை. (99) தண்டி. 38 உரை. (100) தொல். செய். 152. பேரா; நச். [5]தழைச்சியான். [6]முலைசுரந்தாங்ககல்விசும்பு சிலதுவற்ற.

ஊருருவத் தெயின்மூன்று மொருங்கவித்தோன் வியப்பெய்த
ஈருருவத் தொருபெருஞ்சூர் மருங்கறுத்த விகல்வெய்யோய்!

[1]ஆங்க,

வினையொழி காலத்து வெவ்வெயிற் கோலத்
தனைவருந் தத்த மறம்புரிந் தாங்கு
முனையடு கொற்றத்து முன்னுன் குருவிற்
கனைகடல் சுட்டன கண்;

தேவரு மக்களுஞ் சீற்றத்தா னஞ்சாமைக்
காவல் புரியுங் கதிர்மதி போலும்
மூவிரு தோன்றன் முகம்;

மடமகள் வள்ளி மணிக்கம் பலம்போல்
இடையிடை சுற்றுத லின்றுந் தவிரா
தொடையமை தார்க்கடம்பன் றோள்;

அவ்வழி,

அடியிணை [2]சேரா வவுணரை நுங்கிப்
பொடிபொடி யாகிப் பொருப்பொடு மாய
இடியுமிழ் வானத் திடைநின்று கூஉங்
கொடியணி கோழிக் குரல்;

விழுச்சி ரமரர் விசும்பிடைத் தோன்றிப்
பழிச்சிநின் றார்த்தார் பலர்;

உருசெழு முருகிய முருமென வதிர்தொறும்
[3]அருகெழு சிறகொடு மணவரு மணிமயில்;
[4]பெருகள வருமறை பெறுநெடு மொழியொடு
பொருகள வழியிசை புகல்வன [5]சிறுகுறள்;

சிவந்தன திசை சிலம்பின மலை
நிவந்தன தலை நிரம்பின குறை;

ஆர்த்தன மறை ஆடினர் பலர்
போர்த்தன துகள், [6]பொழிந்தனர் மலர்;

ஆங்கனந் தோன்றிய வடுபோர் வென்றியின்
வீங்கிருந் தொடித்தோள் விடலை நினக்கே
யாமறி யளவையிற் றமிழ்புனைந் [7]தேத்துகம்
[8]நின்னீ தக்க தாயினு நின்னெதிர்
நாணில மாகல் வேண்டும் யாணர்க்

---

[1] ஆங்கு. [2] சேராதவுணர் நடுங்கிப். [3] எரிசிற:கொடுமிணை தபவரு மணிமயில், [4] பெருகிய, [5] சிலகுறள், [6] பொழிந்தன. [7] தேத்துதல். [8] நனிதக்க,

கடம்புக் களிமயிற் பீலியுக் தடஞ்சுனை
நீரொடு [1]நின்வயி னமர்ந்த
வாராப் புலமை வருகமா ரெமக்கே.

101. பூவார் பொய்கைப் பொற்போதிற்
றேவார் செங்கட் சேயாநீ
யாவா வென்று தென்னேசூர்
மாவா னைக் கொன்றாயே.

**கதிர்காமம்.**

102. மணியுமிழ்ந்து மாமலைமேன் மேய்வனவு நாகம்
மடவீர லார்கொய்ய மலர்வனவு நாகம்
பிணியவிழ்ந்து நன்னாளாற் பூப்பனவும் வேங்கை
பிறங்கன்மாத் தொலைத்தவற்றான் றுய்ப்பனவும் வேங்கை
[2]இறைக்காசா னெம்மருளா மாலையு மாலை
யெமக்கினிதா யாமவனைச் சூட்டுவது மாலை
நிறைகாய்த்தி நெஞ்சஞ்சச் சுடுவதுவுங் காமம்
நிலங்காக்குஞ் சேயய்த னெடுநகருங் காமம்.

(கதிர்காமத்துவேலர்முன் பாம்பை மயில் விடப் பாடியது.)

103. தாயரவை முன்வருத்துஞ் சந்த்ரோ தயந்தனக்குன்
வாயரவை விட்டுவிட மாட்டாயோ—தீயரவைச்
சீறு மயிற்பெருமா டென்கதிர்கா மப்பெருமாள்
ஏறு மயிற்பெருமா னே.

---

**திருமால், முருகன், ஐயனார்.**

104. பொற்றாணில் வந்தசுடர் பொய்கை பயந்த வண்ணல்
சிற்றாயன் முன்வனிதை யாகி யளித்த செம்மல்
மற்றியார்கொ லென்னின் மலர்தூவி வணங்கி நாளுங்
கற்றார் பரவுங் ககாரி நகாரி காரி

**சிவபிரான், திருமால், துர்க்கை.**

105. கண்ணுதலோன் காப்பக் கடிநேமி யோன்காப்ப
எண்ணிருதோ ளேந்திழையா டான்காப்பப்—பண்ணியனாற்
சென்னியர்க் களிக்குந் தெய்வநீ
மன்னுக நாளுமிம் மண்மிசை யானே.

---

[1]நின்வயின் மாந்த, நின்வயின் மாந்தர். (101) யாப், வி. 94; (102) தெ. 37. [2]இறைக்காச்சா. (103) தமிழ் நா. 145; (104) தண்டி, 95. (105) செந், தொ. 6, பக். 583.

## திருமகள்.

106. நெய்யொடு [1]திரியொக்கச்
[2]செய்யாளைச் சேர்வார்க்குப்
பொய்யாத வுள்ளமே
மெய்யாதல் வேண்டுமே.

## கச்சி உமாதேவி.

107. தொல்லை மறைதேர் துணைவன்பா லாண்டுவரை
எல்லை யிருநாழி நெற்கொண்டோர்—மெல்லியலாள்
ஓங்குலகில் வாழு முயிரனைத்து மூட்டுமால்
எங்கொலிநீர்க் [3]காஞ்சி யிடை.

---

## பகவதி.

108. மலையு மலையு மகிழ்ந்துறையும் வேயுங்
கலையுங் கலையுங் கடவுந்—தொலைவில்
அமரி யெமக்கரணு மென்னுமவர் முன்னிற்
குமரி குமரிமேற் கொண்டு.

109. அளவே வடிவொப்ப தன்றியே பச்சை
யிளவேய் நிறத்தாலு மேய்க்குந்—தளவேய்
சிலைக்குமரி போர்துளக்குங் காரவுணர் வீரந்
தொலைக்குமரி யேறுகைப்பா டோள்.

(நிலைவேளி விருத்தம்.)

110. சேயரி நாட்டமுஞ் செவ்வாயு மல்குலுமோ—அம்மானாய்
ஆய்மலருந் தொண்டையு மாழியுந் திண்டேரும்—அம்மானாய்
மாயிருந் தானை மயிடன் றலையின்மேல்—அம்மானாய்
பாயின சீறடிப் பாவை பகவதிக்கே—அம்மானாய்.

(கலிப்பாவகை.)

111. மழைநுழைந்து புறப்பட்ட மதியமு ஞாயிறும் போல்
[4]உழைமுழங்கு வலம்புரியுந் திகிரியு மொளிசிறப்பப்

---

(106) தொல். செய். 149 பேரா. நச். [1]தீ யொக்க. [2]செய்யானைச். (107) வீரசோ. அலங். 31; தண்டி. 77 உரை. [3]கச்சியிடம். (108) தண்டி. 93 உரை. (109) ஷை. 30 (110) யாப். வி. 68. (111) தொல். செய். 149 பேரா; நச். [4]உழைவழங்கு.

[1]பச்சென்ன வானிட்ட வில்லேபோற் பசுந்துழாய்
கச்சென்னக் கனல்கின்ற கவின்முலைமேற் கவின்செய்ய
அம்மேகத் திடைப்பிறந்த நரையுருமே றதிசயிப்ப
மைம்மேனி மருங்கதிர [2]வரியேறு வால்புடைப்ப
விண்டோயு மணிநீல [3]வெற்பினிடை வேய்பிடைந்தாங்
கெண்டோளு மிடுநீழ விளங்கிளிகள் களிகூரக்
கொதியாது கொதித்தெறிந்த கோட்டெருமைத் தலையின்மிசை
மிதியாத சீறடி மிதித்தன போற்றோன்றத்
தாங்கிய புகர்வாளுங் கேடகமுந் தனித்தனி
வாங்கிய கோளரவு மதியமும் போன்றிலங்க
மைதொடுத்த கடற்புறஞ்சூழ் மலையென்ன மணியல்குல்
கொய்துடுத்த பொற்றுகிலின் கொழுஞ்சோதி கொழுந்தோட்ட
நீனின்ற படிவத்தா னெடியோனை முதற்பயந்த
தாயென்று முதுமறை பாவினும்
யாயென் றல்ல தியாந்துணி யலமே.

(வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா.)

112. கல்லின்மே ஞறிய கனபவளக் கொடியேய்ப்பக்
கொல்சின மதவெருமைத் தலையொதுங்கி மற்றதன்
சில்குருதி சீறடிமேற் சிலம்போடு கழனணைப்ப
விளங்குபொன் னெடுவரைமேல் வெய்துறுமி யெழுந்தாங்குத்
துளங்காச்சீர்ப் படையோடுந் தொழிலோடும் பொலிந்தோடக்
களங்கொண்டு முடியுகைத்த கலைமானேற் றூர்தியோய்! (தரவு)

பெருந்தகைமை பிறிதொழியப் பிடிக்கோடுங் களிறேபோல்
அருஞ்சமத்து நினக்குடைந்த வவுணரை நினைக்குங்காற்
கரும்புருவ நுதல்வியர்ப்பக் கச்சினுல் விசித்தநின்
மருங்குல தளவெண்ணின் மாயமும் போலுமே;

பேழ்வாய விறற்கூளி பின்னுர்ப்ப முன்சென்று
வீழ்வாயா னீயெறிந்த வீரரை நினைக்குங்காற்
கேழ்கிள ரவிர்முன்கைக் கிளியிருப்ப வெடுக்கில்லா
மாழைமை காணுங்கால் மம்மரும் போலுமே;

வாளுற முயர்விசும்பின் வாய்மடித்து விறற்சுட்டித்
தாள்சோர நினக்குடைந்த தானவரை நினைக்குங்காற்

[1]வானிட்ட வில்லேபோற் பசுந்துழாய் பச்சென்னக்—கானின்று கனல்கின்ற கதிர்முலைமேற் கவின்செய்ய. [2]நகத்தரியே. [3]வெற்பிடை (112) யாப். வி. 84.

பூளையார்ந் தெழிலெய்தப் பொறியணை புரையுநின்
தோளின தளவெண்ணிற் றேற்றரும் [1]போலுமே (தாழிசை)

எனவாங்கு ; (தனிச்சொல்)

கடிகமழ் பூங்குலைக் கலங்கிருந் துடுப்பிற்
காராரக் காந்தண்முகை வென்றன விரல் ;
விரலுற விரித்தமைத்து விசும்புதை வந்து
முலையொடு முத்தொடு மாறின பந்து;
பந்தவிழ் பணிச்சென்னி கையற் றெரீஇய?
அசோகி னந்தளி ரணியியற்ற வணிகொண்டது நுதல் ;
நுதலிவர் கதுப்புக் குதவியபொன் கனலின மணி ;
மணிமகர முருவாக நிகரொத்தன முத்து;[2] (அராகம்)

அரியொண்க ணம்பிற் பிறழும் வரியல்குல்
வண்டிருப் பன்ன தகைத்து;
கூழை புறமுறத் தாழ்ந்தன வாழை
வருமுகி ழேய்க்கு முலை; (பேரெண்)

பெருமட மான்பிணை வென்றது நோக்கு ;
சிறுமருங்குற் கொல்கின முல்லைக் கொடி; (சிற்றெண்)

படுமணி படிமொருகை; பைங்கிளி யதுவொருகை;
வடிநுதி வேலொருகை; வாள்கொண்ட தகைத்தொருகை;
சேடகத்தாற் சேடொருகை; சிலைசேர்ந்த தொழிற்றொருகை;
(இடையெண்)

கோடொருகை ; இயமொருகை ; (அளவெண்)

எனவாங்கு; (தனிச்சொல்)

இருபாற் பட்டநின் னிணையடி பரவுதும்
ஒருபாற் பட்டெமக் கருளுவோ யெனவே. (சுரிதகம்)

113\. மூவிலை நெடுவே லாதி வானவன்
இடமருங் கொளிக்கு மிமயக் கிழவி
தனிக்கண் விளங்கு நுதற்பிறை மேலோர்
மிகைப்பிறை கதுப்பிற் சூடி வளைக்கையின்
வாள்பிடித் தாளி யேறித் தானவன்
மாளக் கடும்போர் கடந்த குமரி

---

[1]போலாரே. [2]'முத்துநகைக் கதிர்மின்னுக. வவிர்துகிலிடைப்பூங்கண்ணி னுக்கு'? என்பது இதன் அடுத்த அடி. (113) ஆசிரியமாலை (புறத்திரட்டு).

மூவா மெல்லடித் திருநிழல்
வாழி காக்கவிம் மலர்தலை யுலகே.

## கண்ணுடையம்மையருளால் அவித்தநெல்முளைப்பதைப்பற்றிய வெண்பா.

114. கண்ணுடைய தாய்மகிமை காசினியோ ரிவ்வளவென்
றெண்ணுடைய தாய்மதிக்க வேலாது—மண்ணுடைய
புன்முளைக்க வெத்தனைநாட் போதுமுட னேயவித்த
நென்முளைத்தல் சால நிசம்.

---

## நாமகள்.

115. தவளத் தாமரைத் தாதார் கோயி
லவளைப் போற்றுது மருந்தமிழ் குறித்தே.

116. என்னை யுடையாள் கலைமடந்தை யெவ்வுயிர்க்கும்
அன்னை யுடைய வடித்தளிர்கள்—இன்னளிசூழ்
மென்மலர்க்கே தங்கு மெனவுரைப்பர் மெய்யிலா
வன்மனத்தே தங்குமோ வந்து.

117. இமயவர்கண் மோலி யிணைமலர்த்தாள் சூடச்
சமயந் தொறுநின்ற தையல்—சிமய
மலைமடந்தை வாச மலர்மடந்தை யெண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண்.

118. பொத்தகமு ஞானத்து முத்திரையும் பொற்பளிங்கும்
வைத்த கமண்டலமும் வன்னிகையும்—முத்து
வடங்கொண்ட பூண்முலையாள் வந்தென் மனத்தே
இடங்கொண்டா ணீங்கிற் றிடர்.

(கம்பர்வாக்கு.)

119. ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

120. படிக நிறமும் பவளச் செவ்வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந்—துடியிடையும்
அல்லும் பகலு மனவாத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

---

(114) செந்தமிழ்த்தொகுதி கூ. பக். சக. (116) தண்டி. காப்பு. (117) தண்டி. 19 உரை. (118) பாரதம் (மியூ. காட். II, 502).

(காளமேகப்புலவர் பாட்டு.)

121. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம் வைத்த தாய்.

## சூரியபகவான்.

122. முன்னங் குடைபோன் முடிநா யகமணிபோன்
மன்னுந் திலகம்போல் வாளிரவி—பொன்னகலந்
தங்குங் கவுத்துவம்போ லுந்தித் தட்மலர்போல்
அங்க ணுலகளந்தார்க் காம்.

123. மேகத்தான் வெற்பா னிமையான் விழுப்பனியான்
நாகத்தா னீமறைய நாட்கதிரே—யோகத்தாற்
காணுதார் நின்னை [1]நிலையாமை கட்டுரைப்பர்
நாணுத கண்ணெனக்கு நல்கு.

(கோச்சகவொருபோகு.)

124. தடங்கடற் பூத்த தாமரை மலராகி
அடங்காத முரற்சியா னருமறை வண்டிசைப்ப
ஆயிர வாராழி யவிரிதழின் வெளிப்பட்ட
[2]சேயித ழெனத்தோன்றுஞ் [3]செழும்பகலி னிரவகற்றிப்
[4]படுபனிப் பகைநீங்கப் பருவத்து மழையானே
நெடுநிலங் குளிர்கூர நீர்மைசா னிழனுறி
அண்டங்கள் பலபயந்த வயன் முதலா மிமையோரைக்
கொண்டங்கு வெளிப்படுத்த கொள்கையை யாகலின்
ஓங்குயர் [5]பருதியஞ் செல்வநின்
நீங்கா வுள்ள நீங்கன்மா ரெமர்க்கே.

(பெருந்தேவபாணிவகை.)

125. ஆயிரங் கதிராழி யொருபுறந்தோன் றகலத்தான்
மாயிருந் திசைசூழ வருகின்ற வரவுணர்த்த
மனக்கமல மலரிணையு மலர்த்துவான் முனுதல்

(122) தண்டி. 40 உரை. (123) தொல் புறத். 33. [1]யிலையாமை (124) தொல். செய். 150 பேரா; நச். [2]சேயிழை. [3]செம்பகலி. [4]படுவகைப் பனிப் பகை நீங்கப் பருவத்து-விடுமழை மறுத்திடினு மென்மலரின் மதுமழையால். [5]பருதிச். (125) தொல். செய். 146 பேரா; நச்.

இனக்கமல முணர்த்துவபோன் றெவ்வாயும் வாய்திறப்பக்
[1]குடதிசையின் மறைவதூஉ மறையென்று கொள்ளாமைக்
[2]கடவுளர்த முறங்காத கண்மலரே கரிபோக
ஆரிருளும் புலப்படுப்பா னவனேயென் றுலகறியப்
[3]பாரகலத் திருள்பருகும் பருதியஞ் செல்வகேள்! (தரவு)

மண்டலத்தி னிடைநின்று வாங்குவார் வைப்பாராய்
விண்டலத்திற் கடவுளரை வெவ்வேறு வழிபடுவார்
ஒங்குலகு [4]முழுதுபோர்த் திருவுருவி னென்றாகி
ஆங்கவரை வேறுவே றளித்தியென் றறியாரால்;

மின்னுருவத் தாரகைநீ வெளிப்பட்ட விடியல்வாய்
நின்னுருவத் தொடுங்குதலா னெடுவிசும்பிற் காணுதார்
எம்மினுங் காலைவா யிடைக்கரந்து மாலைவாய்
அம்மீனை வெளிப்படுப்பாய் நீயேயென் றறியாரால்;

தவாமதியந் [5]தொறுநிறைந்த தண்கலைக டலைத்தேய்ந்
துவாமதிய நின்னொடுவந் தொன்றுகு [6]மென்றுணரார்
தண்மதியி [7]னின்னொளிபுக் கிருளகற்றுத் தவற்றாற்கொல்
அம்மதியம் படைத்தாயு நீயேயென் றறியாரால்; (தாழிசை)

நீராகி நிலம்படைத்தனை; நெருப்பாகி நீர்பயந்தனை;
[8]வளிழியிற் காற்றெழுவினை; ஒளிகாட்டி வெளிகாட்டினை;
(இருசீர்நான்கு)

கருவாயினை, விடாயினை, கதியாயினை, விதியாயினை,
உருவாயினை, அருவாயினை, ஒன்றாயினை, பலவாயினை; (ஒருசீரெட்டு)

எனவாங்கு ; (தனிச்சொல்)

விரிதிரைப் பெருங்கட லமிழ்தத் தன்ன
ஒருமுதற் கடவுணிற் பரவுதுந் திருவொடு
சுற்றந் தழீஇக் குற்ற நீக்கித்
துன்பந் தொடரா வின்ப மெய்திக்
கூற்றுத்தலை பணிக்கு மாற்றல் சான்று
சழிபெருஞ் சிறப்பின் வழிவழி பெருகி
நன்றறி புலவர் நாப்பண்
வென்றியொடு விளங்கி மிகுகம்யா மெனவே.

---

[1]குடதிசைக்கண். [2]கடவுளரே தம்முறங்காக். [3]பாருலகத். [4]முழுது போர்த் திருவுருவி. [5]தொறுநிறையத் தண்கலை யக்கலைதேய்ந். [6]மென்றுணர் வார். [7]னொளிபுக்கம். [8]வரொழிவிற்.

## சந்திரபகவான்.

### (வள்ளிவாழ்த்து.)

126. பிறைகாணுங் காலத்தன் பேருருவ மெல்லாங்
குறைகாணு தியாங்கண்டு கொண்டு—மறைகாணு
தேய்ந்து வளர்ந்து பிறந்திறந்து செல்லுமென்
றுய்ந்தது நன்மாயை யாம்.

### (தேவபாணி.)

127. குரைகடன் மதிக்கு மதலையை குழுமுய லொளிக்கு மாணினை
யிரவிரு ளகற்று நிலவினை யிறையவன் முடித்த வணியினை
கரியவுன் மனத்தி னுதித‌னை கயிரவ மலர்த்து மவணனை
பரவுநர் தமக்கு நினதிரு பதமலர் தபுக்க வினையையே.

---

## நாற்றிசையதிபர்.

128. தெற்குக் குடக்கு வடக்குக் குணக்குமேல்
நிற்குந் திறத்துலகை நீடளிக்கும்—பொற்பினர்
ஈரெண் கலையோன் வருண னிரவியமன்
யாரும் புகழியல்பி னர்.

129. குடபால் வடபால் குணபாறென் பாலென்
றடைவே திசைநான் கவற்றுள்—இடையிரண்டு
நன்மைபுரி வோர்பயந்து நோக்குப வேனைய
வன்மை புரிவோர்க்கே யாம்.

---

## அருகக்கடவுள்.

130. மண்டித் தடுமாறும் வாழ்விழந்தேன் மாதுயரப்
பண்டைப் பழவினைநோய் பற்றறுத்தேன்—பிண்டித்
திருமாலை முக்குடைக்கீழ்த் தேவாதி தேவர்
பெருமானை யானடைந்த பின்.

---

(126) தொல். புறத். 33. (127) சிலப். 6. 37. (128) தண்டி. 106 உரை. (129) ஷை. 107 உரை. (130) மியூ. காட்.